தனிப் பிரதி ரூ. 10/–
ஆண்டுச் சந்தா ரூ. 100/–
ஆயுள் சந்தா ரூ. 1000/–


# அன்பு பகிர்வு இயக்கம்

## செய்திமலர்


மலர் : 11 இதழ் : 3 ஜனவரி 2015


“நிச்சயமாக
நான் உன்னை
ஆசீர்வதிக்கவே
ஆசீர்வதித்து,
உன்னைப் பெருகவே
பெருகப்பண்ணுவேன்...”

எபிரெயர் 6 : 14


ஆசிரியர்.
பேராயர். வே. தேவதாஸ்

## உங்கள் சகோதரனிடமிருந்து...



**கிறிஸ்துவுக்குள் மிக அன்பானவர்களே,**

இரட்சகராம் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் யாவருக்கும் எங்கள் குடும்பத்தின் சார்பிலும், அனைத்து ஷாலோம் ஊழியர்கள் சார்பிலும் **இனிய புத்தாண்டு வாழ்த்துக்களை பகிர்ந்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.**

**"நிச்சயமாக நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன்னைப் பெருகவே பெருகப்பண்ணுவேன்" எபி. 6 : 14**

இந்த வாக்குத்தத்த வசனத்தின்படி திரியேக தேவன் தாமே உங்களையும், உங்கள் குடும்பத்தையும், ஊழியங்களையும், நீங்கள் கையிட்டு செய்யும் உங்கள் பிரயாசங்கள் மற்றும் தொழிலையும் உங்கள் சந்ததியையும் பலமடங்கு ஆசீர்வதித்து பெருகப் பண்ணுவாராக.

இந்த 2015ம் புதிய ஆண்டில் பிரவேசிக்கும் போது இரண்டு காரியங்களை அதிகமாக உணர்கிறேன். ஒன்று, தேவனுக்காக நாம் வைராக்கியமாக, சாட்சியாக வாழ வேண்டும். இரண்டாவதாக, கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு ஆத்துமாக்களை ஆதாயம் செய்யும்படியாகவும்; மணவாட்டியாகிய திருச்சபையை கட்டி எழுப்பும்படியாகவும், ஜெபித்து உழைக்க நாம் அனைவரும் அழைக்கப்படுகிறோம். தேவனுடைய ராஜ்ஜியத்தை கட்டி எழுப்பும் போது தேவன் நம்மை ஆசீர்வதித்து பெருகப்பண்ணுவார்.

இவ்வருடம் ஷாலோம் ஊழியத்தில் இதுவரை நடைபெற்ற ஊழியங்கள் இரு மடங்காக பெருகி, ஆசீர்வதிக்கப்பட்ட அனைத்து 520 சுதேச ஊழியர்களும், 5000 மூப்பர்களும், ஆயிரமாயிரம் விசுவாசி குடும்பங்களும் இணைந்து தேவனுக்காக செயல்பட அர்ப்பணித்து உள்ளோம். ஆகவே ஜெபித்து தாங்குவோரும் இரண்டு மடங்கு எழும்பத்தக்கதாக ஜெபியுங்கள்.

இவ்வருடம் தயவாக மற்றவர்களுக்கு குறிப்பாக உங்கள் பிள்ளைகள், உறவினர்களுக்கு ஊழியங்களை அறிமுகம் செய்து ஜெபித்து தாங்கும்படியாக உதவுங்கள். மேலும் ஷாலோம் பிரதிநிதிகளாக ஊழியங்களை அறிமுகம் செய்ய முன்வாருங்கள். உங்களுக்காக நாங்கள் அனைவரும் குழுவாக ஜெபிக்கிறோம்.

மூத்தமகன் டைட்டஸ் – மெர்லினுக்காக தேவன் தந்த ஊழியங்களுக்காக ஜெபியுங்கள். குறிப்பாக இந்த மாதம் மெர்லினுக்கு சுகப்பிரசவத்தை தேவன் கட்டளையிட ஜெபியுங்கள். பெங்களூரில் (Media வில்- Master Degree) படித்துக் கொண்டிருக்கும் ஷாலோமிற்காகவும்; இரஷ்யாவில் மருத்துவ படிப்பு 5வது வருடம் படித்துக் கொண்டிருக்கும் ஜைக்கினாவிற்காகவும் ஜெபியுங்கள்.

தூத்துக்குடி தலைமை அலுவலகம், பணித்தள அலுவலகம், கிளை அலுவலகங்கள் மற்றும் அனைத்து Project–களில் பணிபுரியும் தேவ பிள்ளைகளுக்காக ஜெபியுங்கள். ஆபிரகாமின் ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் அனைவர் மீதும் இவ்வாண்டு முழுவதும் இருப்பதாக ஆமென்.


***We Wish you all a Happy & Prosperous New Year - 2015***

தேவ அறுவடைப் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,

(பேராயர் V. தேவதாஸ்)

என்னுடன் தொடர்பு கொள்ள : 09377445468 (குஜராத்)

# 2015–ல் ஆசீர்வதித்து பெருகப்பண்ணும் கர்த்தர்



புத்தாண்டு வாக்குத்தத்த செய்தி : **Bishop. V. தேவதாஸ்**

நம்முடைய பிதாவாகிய தேவன் ஆசீர்வதிக்கும் தேவன். வேதத்தில் ஆதியாகமம் 1ம் அதிகாரத்தில் 27, 28 வசனங்களை வாசித்து பாருங்கள். **"தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார்; அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார். பின்பு தேவன் அவர்களை நோக்கி; நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின் மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை (ஆதாம் ஏவாளை)ஆசீர்வதித்தார்.** என்று காண்கிறோம்.

ஆதியாகமம் 9 : 1ல் நோவாவின் குடும்பத்தை தேவன் ஆசீர்வதித்தார். **"பின்பு தேவன் நோவாவையும், அவன் குமாரரையும் ஆசீர்வதித்து: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்புங்கள்"** என்றார். ஆதியாகமம் 12 : 2, 3ல் தேவன் ஆபிரகாமை ஆசீர்வதித்தார். ஆதியாகமம் 26 : 12, 24ல் ஈசாக்கை தேவன் ஆசீர்வதித்தார். ஆதியாகமம் 28 : 13 – 15வரை வாசித்துப் பாருங்கள் தேவன் யாக்கோபையும் ஆசீர்வதித்தார். எண்ணாகமம் 24 : 1ல் இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே கர்த்தருக்குப் பிரியம் என்று தேவன் சொல்லுகிறார். இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுக்கு விரோதமாக பாவங்களை செய்து பின்வாங்கி போய்விட்டாலும் அவர்களை நேசித்து மறுபடியும் அரவணைக்கிற தேவனாக இருக்கிறார். எரேமியா 32 : 38ல் **"அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள். நான் அவர்கள் தேவனாயிருப்பேன்"** என்று ஆசீர்வதிக்கிறார்.

தேவன் ஆபிரகாமின் சந்ததியான இஸ்ரவேலை மட்டும் அல்ல. ஆபிரகாமின் மூலமாக இப்பூமியிலுள்ள சகல ஜாதிகளும் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்று (ஆதி. 12:3) ல் வாக்குக் கொடுத்தார். இந்த வாக்குத்தத்தத்தின் ஆசீர்வாதத்தை இயேசு கிறிஸ்துவின் மூலமாக இந்தப் பூமியில் உள்ள நம் யாவருக்கும் கொடுத்துள்ளார். **"அந்தப்படி விசுவாசமார்க்கத்தார் விசுவாசமுள்ள ஆபிரகாமுடனே ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவினால் புறஜாதிகளுக்கு வரும்படியாகவும், ஆவியைக் குறித்துச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை நாம் விசுவாசத்தினாலே பெறும்படியாகவும் இப்படியாயிற்று."** கலாத்தியர் 3 : 9, 14

இந்தப் புதிய ஆண்டிலும் தேவன் நமக்கு ஆபிரகாமுக்கு கொடுத்த ஆசீர்வாதங்களையும், பெருக்கத்தையும் நமக்கும் நம் குடும்பத்திற்கும், நாம் கையிட்டு செய்யும் பிரயாசங்களிலும் விசேஷமாக சபைகளுக்கும், ஊழியங்களுக்கும் நிச்சயமாக 2015ம் ஆண்டில் கட்டளையிடுவார்

**தேவன் ஆபிரகாமிற்கு கொடுத்த பெருக்கமான ஆசீர்வாதங்கள் :**

**1) ஆவிக்குரிய ஆசீர்வாதம் :** ஆதியாகமம் 11ம் அதிகாரத்தில் தேவனுடைய கோபம் வெளிப்பட்டபடியால் பூமி சபிக்கப்பட்டது. பாஷைகள் தாறுமாறாக்கப்பட்டது. பாபேல் கோபுரம் கட்டியெழுப்பின ஜனங்களுக்கு உலகத்திற்கு அது இல்லை. ஆனால் தேவன் ஆபிரகாமை அழைத்தபோது கொடுத்த முதல் ஆசீர்வாதம் அவரோடு உறவாடும் பேசும் பாக்கியம். ஆதியாகமத்தில் ஆபிரகாமின் வாழ்க்கை சரித்திரத்தைப் படித்துப் பாருங்கள். தேவன் ஆபிரகாமுடன் பேசுகிறார். ஆபிரகாம் தேவனுடன் பேசுகிறான். (ஆதி. 18 : 33) ஆபிரகாமை சிநேகிதனே என்று அழைக்கிறார். நான் செய்யப்போவதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ? (ஆதி 18 : 18) என்று கூறுமளவு தேவனோடு உறவாடும் பாக்கியத்தை தந்தார்.

**2) தேவன் ஆபிரகாமை உலக ஆசீர்வாதங்களினால் நிரப்பினார் :** ஆதி. 24 : 25 **எங்களிடத்தில் வைக்கோலும் தீவனமும் வேண்டியமட்டும் இருக்கிறது; இராத்தங்க இடமும் உண்டு என்றாள்.**

**3) அனைத்து வம்சங்களுக்கும் ஆசீர்வாதமாக மாற்றுகிறார் :** ஆதி. 12 : 3 **உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனை சபிப்பேன்; பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார்.**

இரண்டாவதாக, நம் தேவன் ஆசீர்வதிக்கும் கர்த்தர் மட்டுமல்ல அவர் வாக்குமாறாத தேவன். தேவன் வாக்குத்தத்தம் பண்ணுகிறவர் மட்டுமல்ல, வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்ல தேவனாகவும், உண்மையுள்ளவராகவும் இருக்கிறார். (எபிரேயர் 11 : 11, 18) எபிரேயர் 6 : 18 ஐ வாசித்துப் பாருங்கள் நமக்கு முன் வைக்கப்பட்ட நம்பிக்கையைப் பற்றிக் கொள்ளும்படி அடைக்கலமாய் ஓடிவந்த நமக்கு இரண்டு மாறாத விசேஷங்களினால் நிறைந்த ஆறுதலுண்டாகும்படிக்கு **எவ்வளவேனும் பொய்யுரையாத தேவன் அப்படிச் செய்தார்.** வாக்குத்தத்தம் பண்ணின தேவன் எவ்வளவேனும் பொய்யுரையாத தேவன் அல்லவா? மனம் மாற அவர் மாந்தன் அல்லவே, மனிதர்களுடைய அன்பும், ஆதரவும் மாறிவிடலாம். சூழ்நிலைகள் மாறிவிடலாம். வாக்குப் பண்ணினவர்கள், உதவி செய்வோம், துணையிருப்போம் என்று சொல்லியவர்கள் கூட மாறி விடுவார்கள்.

ஆனால் நம்மை அழைத்தவர் ஒருபோதும் கைவிடமாட்டார். 34 வருடங்களுக்கு முன்பு என்னுடைய 20வது வயதில் தேவன் என்னை தேவதாஸ் என்று பெயர் சொல்லி அழைத்தார். என் தனிப்பட்ட வாழ்வில் அன்பும், சமாதானமும் கிடைக்கப் பெறாமல், உயிரை மாய்த்துக் கொள்ள முயற்சித்த என்னை, நம்பிக்கையில்லாது வாழ்ந்து கொண்டிருந்த என்னைத் தேடி வந்தார் இயேசு. பாவங்கள், சாபங்கள், நோய்களை நீக்கி விடுவித்து புதுவாழ்வை இயேசு கிறிஸ்துவினால் தந்தார் தேவன். மட்டுமல்ல ஒரு ஜாதி மக்களுக்கு உன்னை ஆசீர்வாதமாக வைப்பேன் என்று வாக்குத்தத்தங்களை தந்தார்.

திருமணமாகி ஒரே வாரத்தில் பீல் மக்களை தரிசனத்தில் காட்டி 40 நாட்களில் பீல் மக்கள் மத்தியில் அழைத்து வந்தார். திருடர்கள், சாராயம் குடிப்பவர்கள்; மந்திரவாதிகள்

மற்றும் அந்தகாரங்கள் நிறைந்த இந்த பீல் மக்கள் மத்தியில் அழைத்தவர் உண்மையுள்ளவராக எங்களை வழிநடத்தி, பயன்படுத்தி, பராமரித்து, பாதுகாத்து 23 வருடங்கள் நடத்தி வந்தார். இன்றைக்கு பாரத தேசத்தில் ஷாலோம் திருமண்டலமாக உருவாக்க கிருபைத் தந்தார். 40 வருடங்கள் முழு இஸ்ரவேல் ஜனங்களை (சுமார் 6 இலட்சத்திற்கும் அதிகமான குடும்பங்கள்) வனாந்திர பாதையில் பலத்த கரத்தினாலும், ஓங்கிய புயத்தினாலும் நடத்தி வந்த தேவன் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்கின்படி இஸ்ரவேலருக்கு பாலும் தேனும் ஓடும் கானான் தேசத்தைக் கொடுத்த தேவன் அவர். இந்த புதிய 2015ஆம் ஆண்டில் உங்களுக்கு தேவன் என்ன வாக்கினை குடும்பத்திற்கு, ஊழியத்திற்கு, சபைக்கு கொடுத்தாரோ அதை அனைத்தையும் இந்த ஆண்டு தந்து நிறைவேற்றுவார். தேவனுடைய வாக்குத்தத்தத்தை பற்றிக் கொண்டு ஜெபித்து சுதந்தரிப்போம்.

மூன்றாவதாக வாக்குத்தத்தங்களின் ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொள்ள விசுவாசிக்க வேண்டும். நீங்கள் அசதியாயிராமல், வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களை விசுவாசத்தினாலும் நீடிய பொறுமையினாலும் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களைப் பின்பற்றுகிறவர்களாயிருந்து எபிரெயர் 6:11 ஆபிரகாமுக்கு தேவன் முதலாவது சந்ததியின் ஆசீர்வாதத்தையும், பின்பு பெருக்கமான ஆசீர்வாதத்தையும் கட்டளையிட்டார். ஆபிரகாம் சாராள் வயது சென்றவர்களாக இருந்தாலும், கர்ப்பம் செத்துப் போயிருந்தாலும் அவைகளை குறித்து சற்றும் எண்ணாமல், வாக்குத்தத்தத்தை விசுவாசித்தான். நம் வாழ்வில், ஊழியத்தின் பாதையில் பல சமயங்களில் நம்பிக்கையற்ற சூழ்நிலைகள் வரலாம். மூழ்கி விட்டோம் என்ற நிலைமை கூட வரலாம், ஆனால் நம்மை தூக்கியெடுக்கும் தேவன், சூழ்நிலைகளை மாற்ற வல்ல தேவன் நம்முடன் இருக்கிறார்.

ஆபிரகாமின் விசுவாசத்தை காணும்போது இரண்டு காரியங்களை அறியலாம். முதலாவது இல்லாதவைகளை இருக்கிறவைகளை போல் அழைக்கும் தேவனை விசுவாசித்தான். வானத்து நட்சத்திரங்களை போல் உன் சந்ததியை பெருகப் பண்ணுவேன் என்று சொன்ன தேவனை ஒரு பிள்ளை கூட இல்லாத போதும் விசுவாசித்தான். இரண்டாவதாக, சரீரம் மரித்து போன நிலைமை, நம்பிக்கைக்கேதுவில்லாத சூழ்நிலையிலும் அதை புதுப்பிக்க வல்லவர்! உயிர்த்தெழுந்த வல்லமை உடையவர் என்று விசுவாசித்தான்

நம்முடைய வாழ்வில் 2015ஆம் ஆண்டில் எவைகள் நமக்கு பெரிய காரியமாக காணப்படுகிறதோ அவைகளை தேவன் நமக்கு உருவாக்கி தருவார் என விசுவாசிப்போம். அதுபோல் நம் வாழ்வில், ஊழியப் பாதையில் எப்படிப்பட்ட நம்பிக்கையற்ற சூழ்நிலை, காரியங்கள் காணப்பட்டாலும் அதை மாற்றி உயிர்ப்பிக்கும் தேவன் இருக்கிறார் என விசுவாசிப்போம். தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை என்ற தேவ வாக்கினை நினைவு கூறுவோம். கட்டாயமாக நீங்கள் இவ்வருடம் மிகப் பெரிய காரியங்களை காண்பீர்கள். தேவன்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

அடுத்தபடியாக ஆபிரகாமின் ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்ள வேதம் சொல்கிறது, நீங்கள் நீடிய பொறுமையினால் சுதந்தரிக்க வேண்டும். நீங்கள் அசதியாயிராமல், வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களை விசுவாசத்தினாலும் **நீடிய பொறுமையினாலும்** சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்களைப் பின்பற்றுகிறவர்களாயிருந்து (எபிரெயர் 6 : 11)

ஆபிரகாமிற்கு தேவன் சந்ததியின் வாக்கு தந்த போது சில வருடங்கள் காத்திருக்க வேண்டியதாயிருந்தது. பொறுமையுடன் காத்திருந்தபோது தேவன் ஏற்றகாலத்தில் ஈசாக்கை கொடுத்தார். ஆதியாகமம் 15ஆம் அதிகாரத்தில் தேவன் ஆபிரகாமின் சந்ததிக்கு கானான் தேசத்தை வாக்குத்தத்தம் பண்ணின போது 400 வருடங்கள் அடிமைத்தனத்தில் வாழ்ந்து கடந்து வரவேண்டிய சூழ்நிலை இருந்தது. வேதம் சொல்லுகிறது, ஏனெனில் எமோரியரின் அக்கிரமம் நிறைவேற வேண்டியதிருந்ததால் அதன்பின்பு தேவன் இறங்கி வந்து மோசேயை அழைத்து இஸ்ரவேலை மீட்டு கானான் தேசத்தைக் கொடுத்தார். கலாத்தியர் 4:5 ஐ வாசித்து பாருங்கள், காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார். தேவன் தம்முடைய சித்தப்படி ஏற்ற காலத்தில் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை உலகத்திற்கு அனுப்பி நம்மேல் அன்புகூர்ந்தார். அவர் சித்தம் நிறைவேறப்படும் வரை நீடிய பொறுமையாக காத்திருக்கவேண்டும்.

யோசேப்பை கவனித்து பாருங்கள், தேவன் இரண்டு சொப்பனங்களைக் கொடுத்தும் அது நிறைவேறும்வரை நீடிய பொறுமையுடன் காத்திருந்தார். பாடுகள், நிந்தைகள் மத்தியிலும் நீடிய பொறுமையுடன் வாக்குத்தத்தம் நிறைவேற காத்திருந்தார்.

தாவீதையும் தேவன் அழைத்து சாமுவேல் தீர்க்கதரிசியின் மூலம் அபிஷேகித்து சமஸ்த இஸ்ரவேலர் தேசத்தை ஆள ராஜாவாக தெரிந்துக் கொண்டார். ஆனால் எப்படிப்பட்ட கஷ்டங்கள், மரண கட்டுகள், தனிமை, போராட்டங்களை தன் வாழ்வில் கடந்து வந்தார். நீடிய பொறுமையுடன் தாண்டி வந்தபடியால் ஏற்ற நேரத்தில் முழு இஸ்ரவேலையும் ஆள கிருபைத் தந்தார்.

அடியேனை ஆண்டவர் 1980ஆம் ஆண்டு பெயர் சொல்லி அழைத்து இன்றைக்கு நடைபெறும் ஊழியத்தை, பெருக்கமான ஆசீர்வாதத்தை 34 வருடங்களுக்கு முன்பே திருவுளம் பற்றினார். ஆனால் நாங்கள் இருவரும் 10 ஆண்டுகள் மிகத் தாழ்மையாக, பொறுமையுடன் FMPB, IMS ஆகிய ஸ்தாபனங்களில் தேவன் எங்களை வைத்தபடியால் உண்மையாக ஊழியம் செய்தோம். அதன்பின்பு உண்மையுள்ளவர்கள் என்பதை அறிந்து ஷாலோம் ஊழியங்களை தேவன் தந்தார். மட்டுமல்ல, முதல் 10 வருடங்கள் ஏழ்மை, கஷ்டங்கள், பிரச்சனைகள் மத்தியில் அழைத்த தேவனை மட்டும் நோக்கிப் பார்த்து நீடிய பொறுமையுடன் ஊழியம் செய்தபடியால் இன்று ஒரு திருமண்டலமாக ஊழியம் வளரும்படியாக, ஆயிரமாயிரமாக பெருகும்படியாக தேவன் கிருபைத் தந்துள்ளார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

இந்தப் புதிய 2015ம் ஆண்டிலும் நம்மை அழைத்த தேவனை நோக்கிப் பார்த்து, வாக்குத்தத்தங்களை உறுதியாகப் பிடித்து, விசுவாசத்துடன், நீடிய பொறுமையுடன் ஓட்டத்தில் முன்னேறுவோம். தேவன்தாமே நம் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக!

## கடந்த டிசம்பர் மாத ஊழிய நிகழ்வுகள்

- தேவ கிருபையால் கடந்த டிசம்பர் மாதத்தில் குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் ஆகிய 3 மாநிலங்களில் 20 ஆலயங்களை பிரதிஷ்டை செய்ய தேவன் கிருபை செய்தார்.
- டிசம்பர் மாதம் 1 மற்றும் 2–ம் தேதிகளில் நமது ஷாலோம் ஊழியத்தை நேசித்து தாங்கி வரும் **சகோ. சாமுவேல் நடராஜன்** (துபாய்) அவர்கள் குடும்பமாக பணித்தளத்திற்கு வருகை தந்து, பாடல்வா, வால்பூர் ஆகிய ஆலயங்களைப் பிரதிஷ்டை செய்து, ஜாம்லா, கொய்கா ஆகிய ஆலயங்களையும் பணித்தளங்களையும் பார்வையிட்டார்கள்.
- 6 மற்றும் 7–ம் தேதிகளில் மும்பையிலிருந்து **சகோ. ஜெயச்சந்திரன்** அவர்கள் குடும்பம் மற்றும் அவரது மகன் **சகோ. ஜான்** அவர்களும் குடும்பமாக பணித்தளத்திற்கு வருகை தந்து, தாங்கள் நிதியுதவி அளித்த குஜராத்திலுள்ள கர்வானி ஆலயத்தைப் பார்வையிட்டார்கள். மேலும் இராஜஸ்தானிலுள்ள கொய்கா ஆலயத்தில் விசுவாசிகளுக்கென்று வேதாகமங்கள் வழங்கினார்கள்.
- 20 & 21–ம் தேதிகளில் மும்பையிலிருந்து **சகோ. ஜெபராஜ்** அவர்கள் குடும்பம் வந்து பணித்தளத்தைப் பார்வையிட்டு, மத்தியப்பிரதேசத்திலுள்ள பேருகட் ஆலயத்தைப் பிரதிஷ்டை செய்தார்கள்.
- 1 முதல் 7–ம் தேதி வரை இயேசு விடுவிக்கிறார் ஊழியத்தின் மூலம் 3 வாலிபர்கள் பணித்தளத்தில் நடைபெறும் ஊழயங்களைக் காண வருகை தந்திருந்தார்கள்.
- 1–ம் தேதி முதல் 8–ம் தேதி வரை இயேசு விடுவிக்கிறார் ஊழியத்திலிருந்து **சகோ. ரெக்ஸ்** அவர்கள் தலைமையில் **சகோ. ஜோஷ்வா** மற்றும் **சகோ. ப்ரவீன்** அவர்களும் பீல் மக்கள் மத்தியில் கலாச்சாரம்,கல்வி மற்றும் சுகாதாரம் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைக் குறித்து (Video Documentary) வீடியோ பதிவு செய்யும்படி வருகை தந்திருந்தார்கள்.
- கடந்த மாதம் Compassion project மற்றும் ஷாலோம் பள்ளி மற்றும் விடுதியிலுள்ள சிறுவர்களுக்கென்று கிறிஸ்மஸ் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது. அந்தர்வேலியாவில் 9–ம் தேதியும், ஜெரியில் 16–ம் தேதியும், ஹிரோலாவில் 21–ம் தேதியும், மேலும் கடுவாடா விடுதியில் 19–ம் தேதியும், பிஜல்பூர் பள்ளியில் 16–ம் தேதியும் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிகள் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சுமார் 2000 சிறுவர்கள் பங்கு பெற்றனர். அவர்களுக்கென்று புத்தாடைகள் வழங்கப்பட்டது.
- 13,15,17,18 ஆகிய தேதிகளில் குஜராத், மத்தியப்பிரதேசம் மற்றும் இராஜஸ்தான் ஆகிய 3 மாநில ஊழியர்கள் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. இக்கூடுகைகளில் ஊழியர் குடும்பத்துக்கும், பிள்ளைகளுக்கும் புத்தாடைகள் வழங்கப்பட்டது. மேலும் சபைகளுக்கு 6000 Stars மற்றும் Decorations & Calenders வழங்கப்பட்டது.

- 3–ம் தேதி மற்றும் 12–ம் தேதிகளில் சேவா பாரத் மூலம் நடத்தப்பட்ட ICT யில் முடித்த 20 மாணவர்களுக்கென்று குஜராத்தில் தெல்சர் ஆலயத்திலும், இராஜஸ்தானில் பேடவ் ஆலயத்திலும் பட்டமளிப்பு விழா நடைபெற்று, அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.
- **பேராயர். தேவதாஸ்** அவர்கள் கடந்த மாதம் 7–ம் தேதி டுங்கரிப்பாடா, காளியா மற்றும் 17–ம் தேதி அம்ளிஃபளியா மற்றும் 21–ம் தேதி கால்கன்டுவி, வாக்கனேர் மற்றும் 23–ம் தேதி உபேராவ், தெல்வானி மற்றும் 24–ம் தேதி போர்பானி ஆகிய ஆலயங்களை ஜெபித்து பிரதிஷ்டை செய்தார்கள்.
- 15–ம் தேதி மாலை பணித்தள அலுவலக ஊழியர்களுக்கென்றும், ஷாரோன் நினைவு மிஷன் மருத்துவமனை ஊழியர்களுக்கும் கிறிஸ்மஸ் நிகழ்ச்சி நடைபெற்றது.
- 3 மாநிலத்திலும் அனைத்து ஷாலோம் சபைகளிலும் கிறிஸ்மஸ் பவனி ஆராதனை நடைபெற்றது. மேலும் 25–ம் தேதி கிறிஸ்மஸ் ஆராதனை சிறப்பாக நடைபெற்றது.
- தேவ கிருபையால் 600–க்கும் அதிகமான ஊழியர் குடும்பங்கள், 2000–க்கும் அதிகமான பிள்ளைகளுக்கு, புத்தாடைகளும், தலைமை அலுவலகம் மற்றும் பணித்தளஅலுவலம் மற்றும் Project ஆகியவற்றில் பணிபுரியம் ஊழியர்களுக்கு கிறிஸ்மஸ் வெகுமதி தொகை வழங்கப்பட்டது. மேலும் கிறிஸ்மஸ் நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றது.

இந்த இதழ் உங்கள் கைகளில் கிடைக்கும் போது டிசம்பர் 29–ம் தேதி ஷாலோம் சுதேச ஊழியர்கள் குடும்பமாக பகுதி வாரியாக ஸ்தோத்திர ஜெபம் நடத்திக் கொண்டிருப்பார்கள். 30–ம் தேதி சபைகளில் ஸ்தோத்திரக் கூட்டம் நடத்தி புது வருடத்திற்காக ஆயத்தமாகி வருகிறார்கள்.

இதற்காக சுமார் ரூ.15 இலட்சங்கள் செலவிடப்பட்டது. இந்த காணிக்கைகளை தியாகத்தோடும், உற்சாகத்தோடும், கொடுத்த தேவ ஊழியர்கள், சபைகள், தேவ பிள்ளைகள் மற்றும் ஷாலோம் ஆதரவாளர்கள், எல்லோருக்காகவும் தேவனைத் துதித்து, நன்றி கூறுகிறோம். குறிப்பாக 2014 முழுவதும் இந்த ஊழியத்தையும் எங்களையும், பீல் மக்களையும் நேசித்து ஜெபித்து தாங்கி வரும் ஆதரவாளர்கள் யாவரையும் தேவன் பல மடங்கு ஆசீர்வதிப்பாராக!

## நாசரேத் பகுதி ஆதரவாளர்கள் கவனத்திற்கு

நாசரேத் பகுதியில் வசிக்கும் ஷாலோம் பங்காளர்கள் மிஷனெரி காணிக்கைகளைக் கொடுக்க **சகோதரி வயோலா மர்காஷிஸ்** அவர்களை தொடர்பு கொள்ள மிக அன்போடு கேட்கிறோம். அவர்கள் ஷாலோம் ஊழியத்தின் நாசரேத் பகுதியில் பிரதிநிதியாக செயல்பட்டு வருகிறார்கள். அவர்களோடு தொடர்பு கொள்ள

**Sis. D. Viola Margochis**
21 Z6, Cross Street, Y.M.C.A. Square, Nazareth - 628 617,
Tuticorin District Cell No. : 94434 62921

## சகோ. ஸ்டீபன் (தேவ அன்பின் ஊழியம், சென்னை) அவர்கள் குடும்பத்தின் பணித்தள வருகை

கர்த்தருடைய பெரிதான கிருபையால் கடந்த நவம்பர் மாதம் 21–ம் தேதி முதல் 23–ம் தேதி வரை **சகோ. ஸ்டீபன்** (இயேசுவே ஆறுதல் ஊழியங்கள், சென்னை) அவர்கள் குடும்பமாக நமது பணித்தளத்திற்கு வருகை தந்திருந்தார்கள். 21–ம் தேதி காலை மத்தியப்பிரதேசத்திலுள்ள **பேராயர். தேவதாஸ்** அவர்களுடன் அந்தர்வேலியா ஆலயம் மற்றும் அங்கு நடைபெறும் சிறுவர்கள் முன்னேற்ற பணியையும் பார்வையிட்ட பின்பு, காளாகூட், நெகடியா மற்றும் மேந்திக்கேடா கிராம ஆலயங்களையும் ஊழியரையும் விசுவாசிகளையும் சந்தித்து அவர்களுக்காக ஜெபம் செய்தார்கள். அதைத் தொடர்ந்து முன்டத் கிராம ஆலயத்திற்கு அருகிலுள்ள மைதானத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த எழுப்புதல் கூட்டத்தில் கலந்துக் கொண்டு தேவ செய்தியளித்தார்கள். அங்கு சுமார் 2000–த்திற்கும் அதிகமான ஜனங்கள் ஆவலோடு காத்திருந்தார்கள். **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் ஜெபித்து கூட்டத்தை ஆரம்பித்தார்கள். துதி ஆராதனை வேளையில் தேவ பிரசன்னம் இறங்கி வந்தது. அதைத் தொடர்ந்து **சகோ. ஸ்டீபன்** மற்றும் அவரது மனைவி **சகோதரி. ஜோஸ்ஃபின்** மற்றும் பேராயர் குடும்பத்திற்கும் சிறப்பு கலாச்சார வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்பு **சகோ. ஸ்டீபன்** அவர்கள் தனது அனுபவ சாட்சியுடன் தேவ வார்த்தையை பகிர்ந்து கொண்டார்கள். அனைவரும் தேவ வார்த்தையின் மூலம் ஆசீர்வதிக்கப்பட்டனர். **சகோதரி. ஜோஸ்ஃபின்** அவர்கள் சிறப்பு ஜெபத்தை ஏறெடுத்தார்கள். கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் தனித்தனியே ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. அநேக ஜனங்கள் பாவம், சாபம், வியாதியிலிருந்து விடுவிக்கப்பட்டு, அபிஷேகத்தையும் பெற்றார்கள். தேவன் மகத்தான காரியங்களைச் செய்தார்.

மறுநாள் 22–ம் தேதியன்று **சகோ. ஸ்டீபன்** அவர்கள் தேவ அன்பின் ஊழியத்தின் மூலம் அளித்த நிதியுதவியின் மூலம் கட்டப்பட்ட மத்தியப்பிரதேசத்திலுள்ள ஃபுலேடி கிராம ஆலயத்தைப் பிரதிஷ்டை செய்யும்படி கரடும் முரடுமான பாதை வழியாக கிராமத்தைச் சென்றடைந்தார்கள். அங்கு விசுவாசிகள் ஆவலோடு காத்திருக்க, தொடர்ந்து புதிதாக கட்டப்பட்ட ஆலயத்தை **பேராயர். தேவதாஸ்** அவர்கள் தலைமையில் **சகோ. ஸ்டீபன்** அவர்கள் ஜெபம் செய்து பிரதிஷ்டை செய்தார்கள். அனைவரும் துதியோடு பரிசுத்த ஆலயத்திற்கு நுழைந்து சென்றார்கள். அங்கு பாடல் ஆராதனை வேளையில் பரிசுத்த ஆவியானவர் மிகவும் வல்லமையாய் இறங்கினார். விசேஷமாக சிறு பிள்ளைகள் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டு, நடனமாடி தேவனை ஆராதித்தார்கள். சில பிள்ளைகள் கண்களில் கண்ணீர் மல்க தேவனை ஆராதித்தது மெய் சிலிர்க்க வைத்தது. தொடர்ந்து கலந்து கொண்ட கர்த்தருடைய தாசர்களுக்கு சிறப்பு வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்பு **சகோ. ஸ்டீபன்** அவர்கள் தேவ செய்தியைப் பகிர்ந்து கொண்டார்கள். விசுவாசிகள் அனைவரும் தேவ செய்தியின் மூலம் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். கிராம ஆலயப் பிரதிஷ்டை ஆராதனை மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது. அதன் பின்பு மத்தியப்பிரதேசத்திலுள்ள காச்லா கிராம ஆலயத்தின் அருகிலுள்ள மைதானத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் சுமார் 700 பேர் ஆவலோடு பல மணிநேரம் காத்திருந்தார்கள். அங்கு சென்று தேவ வார்த்தையை **சகோ. ஸ்டீபன்** அவர்கள்

பகிர்ந்து கொள்ள, **சகோ. டேனியேல்** அவர்கள் மொழிபெயர்த்தார்கள். தொடர்ந்து காச்லா புதிய ஆலயக்கட்டுமானப்பணிக்காக **சகோ. ஸ்டீபன்** அவர்கள் ஜெபித்து அடிக்கல் நாட்டினார்கள். போதகரின் குடும்பத்தையும் சந்தித்து ஜெபித்து ஆசீர்வதித்தார்கள். அதோடு 2–ம் நாள் பணித்தள பார்வை நிறைவு பெற்றது.

அடுத்த நாள் 23–ம் தேதியன்று காலை இராஜஸ்தானில் புதிதாக கட்டப்பட்டுள்ள டுங்கர்பீத் ஆலயப்பிரதிஷ்டை ஆராதனையில் பங்கு பெற்றார்கள். சபை மக்கள் அன்பான வரவேற்பு கொடுத்தார்கள். **சகோ. ஸ்டீபன்** அவர்கள் தேவ வார்த்தையைப் பகிர்ந்து கொள்ள, பேராயர்.தேவதாஸ் அவர்கள் மொழிபெயர்த்தார்கள். கலந்து கொண்ட அனைவரும் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டனர். தேவனுக்கே மகிமை!

## பீல் மக்கள் மத்தியில் நடைபெறும் எழுப்புதல் பணியைக் குறித்து சகோ. ஸ்டீபன் அவர்கள் கூறுவது

- சுவிசேஷ பணியில் அழைக்கப்பட்ட நான் கடந்த மாதத்தில் குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் பீல் மக்கள் மத்தியில் ஊழியம் செய்த நாட்கள் என் வாழ்க்கையிலும், ஊழியத்திலும் மறக்க முடியாத நாட்களாகும். முரட்டாட்டமான இந்த பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் பேராயர்.தேவதாஸ் அவர்களின் குடும்பம் ஆரம்ப நாட்களில் எப்படி பாடுகள் மத்தியில் கடந்து வந்து தியாகத்துடன் ஊழியம் செய்திருப்பார்கள் என்று நினைத்த போது கண்களில் கண்ணீர் மல்கியது.
- இந்த ஷாலோம் ஊழியத்தில் தமிழ்நாட்டிலிருந்து ஒரு மிஷனெரி கூட இல்லாதபடி 500–க் கும் அதிகமான பீல் சுதேச ஊழியர்களை எழுப்பி சபைகளை ஸ்தாபித்திருப்பது மிக ஆச்சரியமான காரியம். நாங்கள் சென்ற ஒவ்வொரு கிராமங்களிலும் தெய்வீக விடுதலை மற்றும் சுகம், இரட்சிப்பு, அபிஷேகத்தின் வல்லமை மற்றும் தேவ பிரசன்னம் நிறைந்த ஆராதனையைக் கண்டு தேவனைத் துதித்தோம். இவைகள் எங்கள் இருதயத்தை மிகவும் தொட்டது.
- இவை யாவும் எப்படி சாத்தியமாயிற்று என்று நினைத்த போது, பரிசுத்த ஆவியானவர் வல்லமையோடு **பேராயர். தேவதாஸ்** அவர்கள் குடும்பம் மற்றும் பீல் சுதேச ஊழியர்களை பயன்படுத்தி வருகிறார் என்பதில் சந்தேகமில்லை.
- இந்த பீல் மக்கள் இயேசுவை நேசிப்பதும், அவர்கள் பல மணிநேரம் ஆராதிப்பதும், எங்களை மெய் சிலிர்க்க வைத்தது.
- நாங்கள் குடும்பமாக ஊழியமாக முழு பீல் மக்கள் இரட்சிப்பின் பணிக்காக ஷாலோம் ஊழியத்தை தொடர்ந்து ஜெபித்துத் தாங்க அர்ப்பணித்துள்ளோம்.

இதை வாசிக்கும் அன்பானவர்களே, ஷாலோம் பணித்தளம் ஒரு நல்ல நிலம். இதற்காக கண்ணீரோடு ஜெபித்து ஊழியங்களைத் தாங்கி ஆலயங்களைக் கட்டிக் கொடுக்கும் போது நூறு மடங்கு ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வீர்கள்.

**சகோ. ஸ்டீபன் & சகோதரி. ஜோஸ்ஃபின்**

(தேவ அன்பின் ஊழியங்கள், சென்னை)

## சகோ. ஸ்டீபன் (தேவ அன்பின் ஊழியம், சென்னை) அவர்கள் குடும்பத்தாரின் பணித்தள வருகை



முண்டத் கிராம சபையில் கலாச்சார வரவேற்பு



செய்திவேளை - முண்டத் கிராமம்



முண்டத் கிராம சிறப்புக் கூட்டத்தில் கூடியிருந்த விசுவாசிகள்



கூபுலேடி (ம.பி) கிராம சபையில் ஆராதனைவேளை





கூபுலேடி (ம.பி) கிராம ஆலயப் பிரதிஷ்டை



விசுவாசிகளுக்கான சிறப்பு ஜெபம்



கூபுலேடி (ம.பி) கிராம சபையில் சிறப்புச் செய்தி



காளகூட் (ம.பி) கிராம ஆலயத்திற்கு முன்பு

## கோவை, சகோ. டேவிட் (சகோ. லாமேக்கு அவர்கள் குடும்பம்) அவர்களின் பணித்தள வருகை


கலாச்சார வரவேற்பு


தேவ செய்தி வேளை



புதிய ஒலிபெருக்கி & மைக்குகளுக்கான சிறப்பு ஜெபம்

## வேர்கிளம்பி, Pr. ஜாண் சகின் (பரிசுத்த ஆவியானவரின் அக்கினி அபிஷேக ஊழியங்கள்) & சகோ. ஜாண் நெல்சன் (மார்த்தாண்டம்) அவர்களின் பணித்தள வருகை


கலாச்சார வரவேற்பு


தேவ செய்தி - Pr. ஜாண் சகின்


சாட்சி பகிர்வு வேளை - சகோ. ஜாண் நெல்சன்



தாங்கள் ஆதரித்து வரும் சுதேச ஊழியர்களின் குடும்பங்களுடன்


பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்கான வேதாகமங்கள்

# போதகர். ஜான் சஹின் மற்றும் சகோ. நெல்சன் அவர்களின் பணித்தள வருகை

தேவனுடைய கிருபையால் கடந்த மாதம் 28–ம் தேதி முதல் டிசம்பர் 2–ம் தேதி வரை ஷாலோம் பணித்தளத்திற்கு மார்த்தாண்டத்திலுள்ள வேர்க்கிளம்பி பகுதியிலிருந்து நானும் **சகோ. ஜான் விக்டர்** அவர்கள் சென்றிருந்தோம். 28–ம் தேதியன்று குஜராத்திலுள்ள ஷாலோம் ஜெரி ஆலயத்தில் நடைபெற்ற சுகமளிக்கும் கூட்டத்தில் கலந்து கொண்டு தேவ செய்தியளிக்கக் கிருபை செய்தார். ஜெப வேளையில் அநேகர் விடுதலையையும் சுகத்தையும் பெற்றுக்கொண்டார்கள். கூட்டம் ஆசீர்வாதமாக இருந்தது. மறுநாள் 29–ம் தேதியன்று இராஜஸ்தானிலுள்ள பாட்லா என்ற கிராமத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட விசேஷக் கூட்டத்தில் பங்கு பெற்றோம். அந்தக் கூட்டத்தில் சுமார் 300 பேர் பங்கு பெற்றனர். அங்கு இவர்களுக்கு கலாச்சார முறையின்படி வரவேற்பு கொடுத்தனர். தொடர்ந்து **சகோ. ஜான் விக்டர்** அவர்கள் தனது சாட்சியைப் பகிர்ந்து கொண்டார்கள். நானும் தேவ வார்த்தையைப் பகிர்ந்து கொள்ள **சகோ. கேரட்** அவர்கள் மொழி பெயர்த்தார்கள். கூட்டத்தின் முடிவில் அனைவருக்கும் விசேஷ ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. கூட்டம் ஆசீர்வாதமாக இருந்தது.

பின்பு இராஜஸ்தானிலுள்ள கொய்கா பேராலயத்தைப் பார்வையிட்டோம். அதோடு 2–ம் நாள் பணித்தளப்பார்வை முடிவடைந்தது. 30–ம் தேதி ஞாயிற்றுக் கிழமையன்று குஜராத்திலுள்ள பான்டிக்கேடி, வரம்கேடா–1&2 ஆகிய ஆலய ஆராதனையில் பங்கு பெற்று, வாழ்த்துக்களைத் தெரிவித்து விட்டு, அங்கிருந்து பாவ்கா கிராம ஆலயத்தில் நடைபெற்ற ஆலய ஆராதனையில் கலந்து கொண்டோம். அங்கு **சகோ. ஜான் விக்டர்** அவர்கள் தங்கள் அனுபவ சாட்சியைப் பகிர்ந்து கொண்டார்கள். அதன் பின் கர்த்தருடைய வார்த்தையைப் பகிர்ந்து கொண்டேன். அதனை **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் மொழிபெயர்த்தார்கள். இறுதி ஜெப வேளையில் ஆவியானவர் பலமாய் அனைவர் மீதும் இறங்கினார். ஆராதனை ஆசீர்வாதமாக இருந்தது.

மறுநாள் டிசம்பர் 1–ம் தேதியன்று குஜராத்தில் ஹிரோலா கிராமத்தில் நடைபெறும் Compassion Project –ஐ பார்வையிட்டோம். அதைத் தொடர்ந்து இராஜஸ்தானிலுள்ள நமது ஷாலோம் பள்ளியையும் விடுதியையும் மாணவர்களையும் பார்வையிட்டு, ஜெபித்தோம். மறுநாள் டிசம்பர் 2–ம் தேதியன்று எங்கள் ஊழியத்தின் மூலம் தாங்கி வரும் இராஜஸ்தானிலுள்ள சுதேச **ஊழியர். சாந்து கராசியா** அவர்களின் குடும்பத்தையும் ஊழியத்தையும் பார்வையிட்டு ஜெபித்தார்கள். அதேபோன்று **சகோ. ஜான் விக்டர்** அவர்கள் தாங்கி வரும் மத்தியப்பிரதேசத்தைச் சேர்ந்த சுதேச ஊழியர். **சகோ. மங்கல்சிங் முனியா** அவர்களின் குடும்பத்தையும் ஊழியத்தையும் பார்வையிட்டு ஜெபித்தார்கள். இந்த பணித்தளப் பார்வையை தேவன் ஆசீர்வதித்து தந்தார். **தேவனுக்கே மகிமை!**

## கோவை, சகோ. டேவிட் அவர்களின் பணித்தள வருகை
## (சகோ. லாமேக்கு அவர்கள் குடும்பம், பெங்களூர்)

கர்த்தருடைய கிருபையால் கடந்த நவம்பர் மாதம் 23–ம் தேதியன்று இயேசு விடுவிக்கிறார் ஊழியத்தின் மூலம் **சகோ. டேவிட்** (சகோ. சாலமோன் லாமேக்கு அவர்கள் குடும்பம்) (பெங்களூர்) அவர்கள் நமது பணித்தளத்தைப் பார்வையிட வருகை தந்திருந்தார்கள். அன்றைய தினம் **பேராயர். தேவதாஸ்** அவர்களுடன் குஜராத் மாநிலத்திலுள்ள நமது ஷாலோம் சபைகள் பாரேவா, கொலானா, வாங்கோல் ஆகியவற்றைப் பார்வையிட்டும், இந்த சபைகளில் நடைபெற்ற ஆராதனையிலும் கலந்து கொண்டு வாழ்த்துக்கள் தெரிவித்தார்கள். அதைத் தொடர்ந்து **சகோ. டேவிட்** அவர்களின் குடும்பத்தார் அளித்த நிதியுதவியின் சார்பில் கட்டப்பட்ட இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள டுங்கர்பீத் என்ற கிராம ஆலயப் பிரதிஷ்டை ஆராதனையில் பங்கு பெற்றார்கள். அங்கு **பேராயர். தேவதாஸ்** அவர்கள் முன்னிலையில் **சகோ. டேவிட்** அவர்கள் தேவனுக்கு நன்றி செலுத்தி ஜெபித்து தேவ நாமம் மகிமைக்காக பிரதிஷ்டை செய்தார்கள். ஆலய ஆராதனை வேளையில் கர்த்தருடைய ஆவியானவர் பலமாய் இறங்கினார்.

அதைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினர்களுக்கு கலாச்சார வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்பு **சகோ. டேவிட்** அவர்கள் வாழ்த்துச் செய்தியளிக்க **சகோ. கேரட்** அவர்கள் மொழிபெயர்த்தார்கள். பின்பு **சகோ. டேவிட்** அவர்கள் குடும்பத்தார் மற்றும் நண்பர்களின் சார்பில் ஆலயத்திற்கென்று வழங்கப்பட்ட 1 ஆம்பிளிஃபயர் மற்றும் 2 ஸ்பீக்கர்கள் தேவ நாமம் மகிமைக்காக ஜெபித்து பிரதிஷ்டை செய்து வழங்கப்பட்டது. **சகோ. ஸ்டீபன்** அவர்கள் செய்தியளித்தார்கள். தேவ செய்தியின் மூலம் அநேகர் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். இறுதியில் கலந்து கொண்ட அனைவருக்கும் அன்பின் விருந்து (உணவு) அளிக்கப்பட்டது. எல்லாவற்றிலும் தேவன் கூட இருந்து ஆசீர்வதித்தார். **தேவனுக்கே மகிமை!**

# உவகை நாம் கொண்டிடுவோம்

### பீல் மக்களுக்கான கிறிஸ்துமஸ் ஈகை விழா

**29.11.2014 – ராஜ் மஹால், தூத்துக்குடி**

**29.11.2014 –** ராஜ் மஹால், தூத்துக்குடிஇயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் வாழ்த்துக்கள். கடந்த 29.11.2014 சனிக்கிழமை அன்று தூத்துக்குடி ராஜ் மஹாலில் வைத்து, **"உவகை நாம் கொண்டிடுவோம்"** என்ற தலைப்பில் பீல் மக்களுக்கான கிறிஸ்துமஸ் ஈகை விழா நடைபெற்றது. **Rev. வின்ஃபிரட்** அவர்கள் ஆரம்ப ஜெபம் செய்ய கூடுகை ஆரம்பமானது. இதில் ஷாலோம் தலைமை அலுவலக ஊழியர்களின் பாடல்கள், சிறுவர்களின் நடனங்கள், குறு நாடகங்கள், **சகோ. அற்புதராஜ் மர்காஷிஸ்** அவர்கள் தலைமையில் முத்துநகர் நற்செய்தி பாடகர் குழுவினரின் இனிய பாடல்கள் மற்றும் **சகோ. பிரின்ஸ்** அவர்கள் குழுவினரின் Ultra Light Programme போன்றவை இடம் பெற்றன.

அதன்பின் **சகோ. சாம் குணசீலன்** அவர்கள் பணித்தள ஊழியங்களைக் குறித்த வீடியோ படக் காட்சியினை காண்பித்தார்கள். அதன்பின் **சகோ. பொற்செல்வன் ஆசீர்** அவர்கள் தேவ செய்தியளித்தார். நிகழ்ச்சிகளை **சகோ. ரதிஸ் குமார்** அவர்கள் தொகுத்து வழங்கினார்கள். இந்த நிகழ்ச்சியில் சேகரிக்கப்பட்ட காணிக்கைகள் பீல் ஆதிவாசி சிறுவர்களுக்கு கிறிஸ்துமஸ் வெகுமதிகளுக்காக செலவிடப்பட்டது.

# சகோ. ஜெயச்சந்திரன் அவர்களின் பணித்தள வருகை

இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையால் நான், என் மனைவி, மகன், மருமகள் மற்றும் பேரக்குழந்தையுடன் பணித்தளத்திற்கு வந்து பார்வையிட தேவன் கிருபை செய்தார். நானும், என் மனைவியும் ஷாலோம் பணித்தளத்திற்கு ஏற்கனவே வந்திருந்தாலும் என் மகன் குடும்பத்தோடு வருவது மிகவும் பரவசமாக அமைந்தது. என் மகன் குடும்பமாக அமெரிக்க தேசத்தில் பணி புரிகிறான். மிகவும் குறுகிய கால விடுமுறையில் இந்தியா வந்தபோது கூட மிஷனெரி பணித்தளங்களை பார்வையிட தங்கள் நேரத்தினை ஒதுக்க தேவன் கொடுத்த வாஞ்சைக்காக அவருக்கு ஸ்தோத்திரம்.

**டிசம்பர் 6ம் தேதி** குஜராத் மாநிலம் பாரேவா, கோலானா ஆகிய கிராம சபைகளை சந்தித்து விசுவாசிகளையும், ஊழியங்களையும் உற்சாகப்படுத்திய பின்பு கர்வானி கிராம சபையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துக் கொண்டோம். இந்த கர்வானி கிராம ஆலயம் எங்கள் குடும்பம் மூலமாக கட்டப்பட தேவன் உதவி செய்தார். தற்போது ஒரு விசுவாசிகளின் பயன்பாட்டிற்காக ஆழ்துளை கிணறு (Hand Pump) அமைக்கவும் தேவன் கிருபை செய்தார். பிள்ளைகளோடு எங்கள் குடும்பத்தின் சார்பாக கட்டப்பட்ட ஆலயத்தினை பார்வையிடுவது மிக்க மகிழ்ச்சி. இந்த இடங்களில் சகோ. சாமுவேல், பணித்தளங்களை பார்வையிடுவதிலும், மொழிப்பெயர்ப்பதிலும் தேவன் உதவி செய்தார்.

பின்பு பேராயர் தேவதாஸ் அவர்கள் மனைவி சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்கள் இராஜஸ்தான் மாநிலம் கோய்கா பணித்தளத்திற்கு எங்களை அழைத்துச் சென்றார்கள். வழியில் ஊழியத்தின் ஆரம்ப கால சாட்சி எங்களை உற்சாகப்படுத்தியது. கோய்கா கிராமத்தில் மிகவும் அழகிய ஆலயம் கட்டப்பட்டுள்ளதை பார்த்து தேவனைத் துதித்தோம்.

எங்கள் குடும்பத்தின் சார்பாக 1000 வேதாகமங்களை, தேவனை புதிதாக ஏற்றுக் கொண்டுள்ள விசுவாசிகளுக்கு கொடுக்க பொருத்தனை பண்ணி ஆயத்தம் பண்ணியிருந்தோம். அதன்படி 500 வேதாகமங்களை முதலில் இராஜஸ்தான் மாநிலம் பல்வேறு பணித்தளங்களிலிருந்து வந்த ஊழியர்களுக்கு ஜெபத்துடன் பகிர்ந்தளிக்க தேவன் உதவி செய்தார். இந்த ஊழியங்களில் எல்லாம் சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்கள் எங்களோடு இருந்து உதவி செய்தது, மொழி பெயர்த்தது எங்களை உற்சாகப்படுத்தியது.

**டிசம்பர் 7ம் தேதி** மத்தியப் பிரதேச மாநிலத்தில் உள்ள ஷாலோம் பணித்தளங்களை பார்வையிட தேவ பெலத்துடன் சென்றோம். முதலாவது, காச்லா திருச்சபைக்கு சென்று விசுவாசிகளோடு ஜெபிக்க தேவன் உதவி செய்தார். சுதேச ஊழியர். காளியா பாபோரின் விசுவாசம் எங்களை ஆச்சரியப்பட வைத்தது. மரித்தவர்களையும் உயிரோடு எழுப்பக் கூடிய விசுவாசத்துடன் அவர் ஊழியம் செய்வது எங்களை தேவனுக்குள் வைராக்கியம் கொள்ள செய்தது. அங்கு ஒரு சுகமளிக்கும் மையம் கட்டப்பட வேண்டும் என்ற ஆர்வத்துடன் ஜெபித்து

செயல்பட தேவன் பாரப்படுத்தியுள்ளார். பேராயர். தேவதாஸ் அவர்களுடன் பகிர்ந்து கொண்டபோது அவர்களுக்குள்ளும் இதே பாரம் இருந்தது. ஒரு மனத்தை தரும் ஆவியானவரின் செயல் அல்லவா? கல்விமான்களையும், ஞானவான்களையும் வெட்கப்படுத்த உலகில் கல்லாதவர்களையும், பேதைகளையும் தேவன் எழுப்பி அவர்கள் மூலம் அவர் செய்யும் மகத்துவம் எவ்வளவு பெரியது.

தொடர்ந்து அந்தர்வேலியா திருச்சபையின் மக்களை சந்தித்து உற்சாகப்படுத்த தேவன் உதவி செய்தார். இறுதியாக முண்டத் கிராம சபை ஆராதனையில் குடும்பமாக கலந்துக் கொள்ள தேவன் உதவி செய்தார். **Pas. பால் முனியா** அவர்கள் திருச்சபையாக எங்களை அன்புடன் கலாச்சார முறைப்படி வரவேற்றார்கள். எதிர்ப்பின் மத்தியிலும் தேவனுக்காக எழும்பி பிரகாசிக்கும் தீபம் அவர்.

தேவன் என்னோடு நேரடியாக பேசிய காரியங்களை சாட்சியாக அறிவித்து தேவ செய்தி அளித்தேன். **“ஒருவன் சுவிசேஷம் அறிவிக்காவிட்டால் அது அவனுக்கு பாவம்”** என்பதை வேத வசனத்துடன் தேவ அதிகாரத்துடனும் அறிவிக்க தேவன் கிருபை பாராட்டினார். கிராம சபையோர் கண்ணீருடனும், புதிய அர்ப்பணிப்புடனும் திருவிருந்தில் பங்கு பெற்றார்கள். மத்தியப்பிரதேச மாநில ஊழியங்களில் சகோ. டேனியல் ஆஸ்வால்ட் எங்களுக்கு உதவி செய்தார்.


பணித்தளங்களை பார்வையிட்டு தாகோத் பணித்தள அலுவலகத்திலுள்ள பேராயர். தேவதாஸ் அவர்கள் வீட்டிற்கு வந்து அவர்களோடு பேசி ஊழிய காரியங்களை அறிந்துக் கொள்ளவும், ஜெபிக்கவும் தேவன் உதவி செய்தார். எங்கள் மகனும், பீல் ஆதிவாசி சிறுவர்களின் கல்விப்பணிக்கு தன்னால் முயன்றதை செய்ய அர்ப்பணித்தது மிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்தது. ஷாலோம் பணித்தளங்களை பார்வையிட யார் வந்தாலும் அவர்கள் வாழ்க்கையில் ஒரு மறுரூபமான மாற்றத்தை உண்டாக்கும் என்பதில் ஐயமில்லை. எங்கள் வாழ்விலும் தேவன் செய்த மகத்துவத்திற்காக ஸ்தோத்திரம்.

---

**தேவனுக்கே மகிமை!** இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் வாழ்த்துக்கள். கடந்த 7.12.2014 அன்று பாகோடு, Bethel Revival Church –ல் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் நமது ஷாலோம் முன்னேற்றப் பணியாளர் **சகோ. செல்வதுரை** அவர்கள் பங்கேற்று ஷாலோம் ஊழியங்களைக் குறித்து பகிர்ந்து கொண்டதோடு, தேவ செய்தியையும் வழங்கினார்கள். இந்த வாய்ப்பினை வழங்கிய சபைப் போதகர் **Pr. ராகவன்** அவர்களுக்காக தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

**தேவனுக்கே மகிமை!** இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் வாழ்த்துக்கள். கடந்த 14.12.2014 அன்று பவதியூர் கோணம், CSI ஆலயத்தில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் நமது ஷாலோம் முன்னேற்றப் பணியாளர் **சகோ. செல்வதுரை** அவர்கள் பங்கேற்று ஷாலோம் ஊழியங்களைக் குறித்து பகிர்ந்து கொண்டதோடு, தேவ செய்தியையும் வழங்கினார்கள். இந்த வாய்ப்பினை வழங்கிய சபைப் போதகர் **Pr. விக்டர் சாம்** அவர்களுக்காக தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

## சகோ. ஜெயசந்திரன் (மும்பை) அவர்கள் குடும்பத்தாரின் பணித்தள வருகை



அன்பான வரவேற்பு



சிறப்புச் செய்தி – சகோ. ஜெயசந்திரன்



வாழ்த்து & சாட்சி பகிர்வு – சகோதரி. டயானா ஜான்





பில் ஆதிவாசி விசுவாசிகளுக்காக சுவிசேஷ ஊழியர்களிடம் வழங்கப்படும் பரிசுத்த வேதாகமங்கள்



கட்டிக் கொடுத்த கர்வானி (குஜராத்) கிராம ஆலயத்தின் முன்

## சேவா பாரத் மூலம் நடத்தப்பட்ட ICT பயிற்சி பட்டமளிப்பு விழா




சான்றிதழ்கள் பெறும் ICT மாணவர்கள்




பட்டம் பெற்றோரை வாழ்த்தும் சகோ. செல்வராஜ் அவர்கள்



பட்டம் பெற்ற மாணவர்களுடன் பிஷப் அவர்கள்

# ஷாலோம் சேரிட்டி மிஷன்

**80 G வரிவிலக்கு உண்டு**

## SHALOM CHARITY MISSION

தேவனுடைய பெரிதான கிருபையால் கடந்த 23 ஆண்டுகளாக தேவன் தந்த **Sharing Love Mission** (அன்பு பகிர்வு இயக்கம்) மூலமாக 1 கோடி பீல் ஆதிவாசி மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கவும், சீஷர்களாக்கவும், ஊழியர்களை எழுப்பவும், சபைகளைக் கட்டவும் தேவன் கிருபை தந்து, ஆயிரம் ஆயிரமாக ஆசீர்வதித்து வருகிறார்.

அதே வேளையில் நம் விசுவாசக் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு கல்வி வசதிக்காக பள்ளிக்கூடங்கள், விடுதிகள் கட்டப்படவும் மற்றும் சுகாதார மருத்துவத் திட்டங்களும், பயிற்சி முகாம்களும் நடத்தப்படவும் வேண்டும். மேலும் குடிநீர் வசதி செய்து கொடுத்தல், சமுதாய மேம்பாட்டுத் திட்டங்கள், பொருளாதார வளர்ச்சிக்கானத் திட்டங்கள் போன்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். குறிப்பாக சுமார் 10 ஆயிரம் பீல் ஆதிவாசி மாணவர்களுக்கு "கல்வி அறிவு வளர்ச்சி திட்டங்களை" செயல்படுத்த வேண்டும். இதற்காக **Shalom Charity Mission** – என்ற இயக்கம் பதிவு செய்யப்பட்டு சமுதாய முன்னேற்றப் பணிகளில் ஈடுபட்டு வருகிறது.

ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலமக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஷாலோம் பள்ளிகள், ஷாலோம் விடுதிகள், கல்வி ஆதரவு சேவைகள் மூலமாக சுமார் 1200க்கும் அதிகமான பீல் ஆதிவாசி மாணவர்கள் பயன் பெற்று வருகின்றனர். மேலும் ஷாலோம் நினைவு மிஷன் மருத்துவமனை ஜூலை – 2013ல் ஆரம்பிக்கப்பட்டு Dr. இன்பக்குமார் ஜோசப் அவர்கள் தலைமையில் மருத்துவப் பணிகளும், இலவச மருத்துவ முகாம்களும் நடைபெற்று வருகின்றன. CBN ஸ்தாபனத்துடன் இணைந்து பீல் மக்கள் வசிக்கும் 200க்கும் அதிகமான கிராமங்களில் ஆழ்குழாய் கிணறு – கை பம்புகள் அமைக்கப்பட்டு குடி நீர் வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

இந்த ஷாலோம் சேரிட்டி மிஷன் பணிகளை சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் Managing Trustee ஆகவும் சகோ. கிளாட்சன் டைட்டஸ் அவர்கள் National Director ஆகவும் பொறுப்பேற்று நடத்தி வருகிறார்கள்.

மேலும் ஆதிவாசி மாணவர் ஆதரவுத் தொகை, உயர்கல்வி படிப்பிற்கான ஆதரவுத் தொகை, இலக்கியப் பணிக்கான ஆதரவுத் தொகை, மருத்துவப் பணிக்கான ஆதரவுத் தொகை மற்றும் இதர சமூக சேவை பணிகளுக்கு நிதி உதவி அனுப்புவோர் **Shalom Charity Mission** – என்ற பெயருக்கே **D.D. or Cheque or M.O.** மூலமாகவோ அனுப்ப மிக அன்பாய் கேட்கிறோம். இந்தப் பெயரில் காணிக்கை அனுப்புவோருக்கு 80G வரிவிலக்கு வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

| | | |
|---|---|---|
| வங்கி கணக்கு | : | **SHALOM CHARITY MISSION** |
| **Axis** வங்கி கணக்கு எண் | : | **105010100096779 - Tuticorin Branch** |
| **TMB** வங்கி கணக்கு எண் | : | **174100710400061 - Tuticorin Branch** |

## சிவகாசி, CSI ராக்லண்ட் ஆலய ஆராதனையில் பேராயர். V. தேவதாஸ் அவர்கள்



CSI ராக்லண்ட் திருச்சபையின் எழில்மிகு தோற்றம்



ஆலய போதகர் & சபை மூப்பர்களுடன்



ஆலயப் பாடகர் குழுவினருடன்

தேவனுடைய பெரிதான கிருபையினால் நமது ஷாலோம் திருமண்டலப் பேராயர் V. தேவதாஸ் அவர்கள் பிறந்து வளர்ந்த ஊரான சிவகாசியில் உள்ள CSI ராக்லண்ட் ஆலயத்தில் 30.11.2014 ஞாயிறு அன்று நடைபெற்ற இரண்டு ஆராதனைகளிலும், பேராயர் வே. தேவதாஸ் அவர்கள் கலந்துக் கொண்டு, ஷாலோம் ஊழியங்களைக் குறித்துப் பகிர்ந்து கொண்டு தேவனுடைய செய்தியையும் கொடுத்தார்கள். அநேகர் தேவனுடைய வார்த்தையினால் தொடப்பட்டனர்.

மேலும் சபையாக இணைந்து மிஷனெரி ஊழியங்களுக்காக ஜெபிக்கவும், ஊழியங்களைத் தாங்கவும் முன் வந்துள்ளார்கள். நம்முடைய ஷாலோம் ஊழியங்களையும், பேராயர் குடும்பத்தையும் நேசித்து வாய்ப்பினை வழங்கிய மதுரை – இராமநாதபுரம் திருமண்டலப் பேராயர் Rt. Rev. Dr. M. ஜோசப், அவர்களுக்காகவும் ராக்லண்ட் சபை போதகர் Rev. ஞானாவன் தங்கையா, அவர்களுக்காகவும் மற்றும் சபை மூப்பர்கள் அனைவருக்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம். இந்த சிவகாசிப் பட்டணத்தில் இருந்து எத்தனையோ மருத்துவர்கள், இஞ்ஜினியர்கள், தொழிலதிபர்கள் உருவானாலும், நமது ஆலயத்தில் இருந்து தேவன் எழுப்பிய மிஷனெரி சகோ. தேவதாஸ் தற்போது பேராயராக இருப்பது நமது சபைக்கு பெருமைக்குரிய விஷயமாகும் என்று சபை போதகர், பிஷப், தேவதாஸ் அவர்களைக் குறித்து கூறினார்கள்.


## உவகை நாம் கொண்டிடுவோம்

### பீல் மக்களுக்கான கிறிஸ்துமஸ் ஈகை விழா

29.11.2014 – ராஜ் மஹால், தூத்துக்குடி



ஷாலோம் நாசரேத் ஆலய ஊழியர்களின் சிறப்பு பாடல்



தேவ செய்தியளிக்கும் சகோ. B. பொற்செல்வன் ஜெசி அவர்கள்

ம ஆலயம்

# லிப்பாடா

தசம்



ரதேசத்திலுள்ள ஜாபுவா
பிலிப்பாடா என்ற கிராமம்
இந்த கிராமத்திலுள்ள மக்கள்
அந்தகாரத்திலும், விக்கிரக
ம் பழக்கமுடையவர்கள். போதகர். கானுசிங் புரியா பாவத்திற்குப் விக்கிரக
அடிமையாக வாழ்ந்து வந்தார். ஷாலோம் ஊழியர் மன்னு பாபோர் மூலம்
, விசுவாசித்து, மனந்திரும்பி, இயேசுவை ஏற்றுக் கொண்டார். பின்பு தன்னை
ப்பணித்து, 3 குடும்பத்துடன் தனது வீட்டில் கூட்டம் நடத்த ஆரம்பித்தார்.
ளில் நடைபெற்ற அற்புதங்களின் மூலம் அநேகர் இயேசுவை ஏற்றுக்
தற்போது இந்த சபையில் 30 குடும்பங்கள் இயேசுவை ஏற்றுக் கொண்டு
றார்கள். தற்போது கானுசிங் புரியா காணிக்கையாக கொடுத்துள்ள நிலத்தில்,
Tower City சபையின் மூலம் கொடுக்கப்பட்ட நிதி உதவியினால் ஆலயம்
-2014 அன்று பேராயர். தேவதாஸ் அவர்கள் தலைமையில் Pr. ஜார்ஜ் ராபர்ட்
பிரதிஷ்டை செய்தார்கள்.

---



ஷாலோம் கிராம ஆலயம்

# சாகுவா இராஜஸ்தான்

சாகுவா என்ற கிராமம்
இராஜஸ்தானிலுள்ள பான்ஸ்வாடா
மாவட்டத்திலுள்ள குசல்கட் தாலுகாவில்
அமைந்துள்ளது. இந்தக் கிராமத்தில் வாழும்
மக்கள் பாவத்திலும் விக்கிரக அந்தகாரத்திலும்
வாழ்பவர்கள். ஊழியர். லால்ஹிங் நினாமா
கப்பனார் ஹாபா பாய் என்பவர் வியாதிப்படுக்கையில் மரிக்கும் தருவாயில்
மற்றும் மருத்துவம் பார்த்தும் எந்த பலனுமில்லாமல் போதகர். பாதர் டோடியார்
ஜெபித்ததில் இவருக்கு சுகம் கிடைத்தது. அதன் பின் 2000-ம் ஆண்டு
ஊழியம் செய்யும்படியாக தன்னை அர்ப்பணித்து, தனது சொந்த கிராமமாகிய
யம் செய்ய ஆரம்பித்தார். ஆத்துமாக்கள் சபைக்கு அதிகமாக வர ஆரம்பித்த
அதிகம் இருந்தது. அப்போது கிராமத்திலுள்ள ஒவ்வொரு வீட்டையும்,
ரையும் சந்தித்து ஜெபித்த போது தேவன் சுகத்தையும் விடுதலையையும்
போது 40 குடும்பங்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டுள்ளனர். ஊழியர் லால்ஹிங்
கையாக கொடுத்த தன்னுடைய நிலத்தில், Pr. ஜார்ஜ் ராபர்ட் P(Praise Tower City
அவர்கள் குடும்பத்தின் சார்பில் கொடுக்கப்பட்ட நிதி உதவியின் மூலம்
ட்டு, 19-11-2014 அன்று பேராயர். தேவதாஸ் அவர்கள் தலைமையில்
அவர்கள் ஜெபித்து பிரதிஷ்டை செய்தார்கள்.





ஷாலோம்

# டுங்கர்பீத்

டுங்கர்பீத் என்ற கிரா
மாநிலத்திலுள்ள பான்ஸ்
குசல்கட் தாலுகாவில் அ
கிராமம் மிகவும் உள்ள
கிராமம். சகோ. சர்தார்
தாயார் கஜா பேன் சுமார் 7 வருடம் கண் பார்வையில்லாமல் அவதிப்
சகோ. மான்சிங் பாரியா என்ற ஊழியர் நடத்திய சுவிசேஷக் கூட்டத்தில்
பார்வை பெற்றார்கள். இந்த அற்புதத்தின் மூலம் சர்தார் பாபோர் அவர்களின்
இயேசுவை ஏற்றுக் கொண்டார்கள். பின்பு இவர் ஊழியம் செய்ய தன்னை அர்
ஆண்டு முதல் ஷாலோம் ஊழியத்தில் இணைந்து ஊழியம் செய்து மத்தி
சபைகளையும், இராஜஸ்தானில் டுங்கர்பீத் சபையையும் உருவாக்கியுள்ள
குடும்பங்கள் இந்த சபையில் ஆராதித்து வருகிறார்கள். இந்த ஆலயம் இயே
நாலுமாவடி ஊழியத்தின் வழியாக திரு. லாமேக்கு (கோவை) அவர்கள் கு
கொடுத்த நிதியுதவியினால் கட்டப்பட்டு, 23-11-2014 ஞாயிற்று
பேராயர். தேவதாஸ் அவர்கள் தலைமையில் சகோ. டேவிட் லாமேக்கு அவ
பிரதிஷ்டை செய்யப்பட்டது.

---

ஷாலோம் கிராம ஆலயம்

# ஃபுலேடி மத்தியப்பிரதேசம்



ஃபுலேடி என்ற கிராமம் மத்தியப்பிரதேச
மாநிலத்திலுள்ள ஜாபுவா மாவட்டத்திலுள்ள
மேக்நகர் தாலுகாவில் அமைந்துள்ளது. இந்த
கிராமத்தில் வாழும் மக்கள் இயேசுவை
அறியாமல் பாவத்திலும் சாபத்திலும்
அந்தகாரத்திலும் வாழ்பவர்கள். தித்ரா புரியா என்ற சகோதரரின்
வியாதியினால் கஷ்டப்பட்டு, எவ்வளவோ மந்திரம் மற்றும் மருத்துவம்
பலனுமில்லை. ஷாலோம் விசுவாசி மூலம் இயேசுவைக் குறித்துக் கேள்விப்ப
எண்ணெய்ப் பூசி ஜெபித்த போது தேவன் சுகத்தைக் கொடுத்தார். இதன்
சொந்த இரட்சகராக குடும்பமாக ஏற்றுக் கொண்டார்கள். 1997-ம் ஆண்டு
நாக்கு பாய் என்ற சகோதரனின் வீட்டில் 5 பேருடன் கூட்டம் நடத்த ஆரம்பி
வளர்ந்து பெருகி, தற்போது 50 குடும்பங்களுக்கும் மேலாக இயேசுவை
சபையின் அங்கத்தினராக உள்ளனர். சகோ. நாக்கு பாய் வசுனியா தனது
கட்டும்படியாக காணிக்கையாகக் கொடுக்கவே அந்த இடத்தில், சகோ. ஸ்டீப
ஊழியம், சென்னை) அவர்கள் குடும்பத்தின் சார்பில் கொடுத்த நிதி உதவி
கட்டப்பட்டு, 22-11-2014 அன்று பேராயர். தேவதாஸ் அவர்கள்
சகோ. ஸ்டீபன் அவர்கள் மூலம் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

## ஷாலோம் கிராம ஆலயம்



# பாடல்வா மத்தியப்பிரதேசம்

பாடல்வா என்ற கிராமம் மத்தியப்பிரதேசத்திலுள்ள ஜாபுவா மாவட்டத்திலுள்ள ராணாப்பூர் தாலுகாவில் அமைந்துள்ளது. இந்தக் கிராமத்தில் வாழும் மக்கள் சாராயம், திருட்டு, விபச்சாரம் போன்ற பாவங்களுக்கு அடிமையாக வாழ்வார்கள். சகோ. ரமேஷ் எம். வசுனியா அவர்களின் குடும்பம் முழுவதும் பிசாசின் பிடியிலிருந்தார்கள். விடுதலைக்காக எவ்வளவோ மந்திரம் மற்றும் மருத்துவம் பார்த்தும் எந்த பலனுமில்லை. கடைசியாக உறவினர் மூலம் இயேசுவைக் குறித்துக் கேள்விப்பட்டு, ஷாலோம் கூட்டத்தில் பங்கு பெற்று விடுதலை பெற்றார்கள். அதன் மூலம் சகோ. ரமேஷ் வசுனியா அவர்கள் குடும்பம் இயேசுவை ஏற்றுக் கொண்டார்கள். பின்பு ஊழியம் செய்ய தன்னை அர்ப்பணித்து, தனது சொந்த கிராமமாகிய பாடல்வா–வில் ஊழியம் செய்ய ஆரம்பித்தார். தற்போது 300 குடும்பங்கள் இயேசுவை ஏற்றுக் கொண்டு சபையில் ஆராதித்து வருகிறார்கள். இவரது சொந்த நிலத்தில், துபாய், சகோ. சாமுவேல் நடராஜன் அவர்கள் குடும்பத்தின் சார்பில் வழங்கப்பட்ட நிதி உதவியின் மூலம் ஆலயம் கட்டப்பட்டு, 01–12–2014 அன்று பேராயர். தேவதாஸ் அவர்கள் தலைமையில் சகோ. சாமுவேல் நடராஜன் அவர்கள் ஜெபித்து, பிரதிஷ்டை செய்தார்கள்.

---

## எழுந்து கட்டுவோம் வாருங்கள்

**இந்த 2015ஆம் வருடத்தில் ரூ. 5 இலட்சங்கள், ரூ. 3 இலட்சங்கள், ரூ. 2 இலட்சங்கள் நிதி உதவி கொடுத்து, 50x20, 40x20, 35x20 அளவுகளில் 100 கிராம ஆலயங்களைக் கட்டிக் கொடுக்க முன் வாருங்கள்**



- ரூ. 2 இலட்சங்கள் நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் 100 பேர்கள்
- ரூ. 1 இலட்சம் நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் 200 பேர்கள்
- ரூ. 50,000 நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் 400 பேர்கள்
- ரூ. 20,000 நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் 1000 பேர்கள்
- ரூ. 10,000 நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் 2000 பேர்கள்

ரூ. 2 இலட்சங்கள், கொடுக்கக்கூடிய ஆதரவாளர்களுக்கு தனியான சபை கட்டுமானப்பணி கொடுக்கப்பட்டு, ஆலய பிரதிஷ்டை DVD மற்றும் புகைப்படங்கள், அறிக்கை அனுப்பி வைக்கப்படும். **மற்ற நிதியாளர்களுக்கு இணைந்து கட்டப்பட்ட ஆலயத்தின் படங்கள், DVD மற்றும் அறிக்கைகள் அனுப்பி வைக்கப்படும்.**

- உங்கள் சபையில் சிறப்புக் காணிக்கைக் கொடுப்பவர்களை எழுப்பி சபை மூலமாக ஆலயங்கள் கட்ட முன்வாருங்கள்.
- உங்கள் குடும்பத்தின் சார்பில் அல்லது நீங்களும் உங்கள் உறவினர்கள் குடும்பங்களுடன் இணைந்து ஆலயம் கட்டிக் கொடுக்க முன்வாருங்கள்.



## ஷாலோம் கிராம ஆலயம்

# ஜாம்லா குஜராத்

ஜாம்லா என்ற கிராமம் குஜராத்திலுள்ள சோட்டா உதய்பூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இந்தக் கிராமத்தில் உள்ள மக்கள் சாராயம் காய்ச்சி குடிப்பது, திருடுவது என பாவத்திலும் அந்தகாரத்திலும் வாழ்பவர்கள். சகோ. ரேவ்லா ராட்டுவா அவர்களின் குடும்பம் பிசாசின் பிடியில் இருந்தது. ஒருவர் பின் ஒருவராக வியாதிப்பட்டு கஷ்டப்பட்டார்கள். சுகத்திற்காகவும் விடுதலைக்காகவும் எவ்வளவோ மந்திரம் மற்றும் மருந்துகள் பார்த்தும் சுகம் பெறவில்லை. அருகிலுள்ள கிராமத்தில் நடைபெற்ற இயேசுவின் கூட்டத்தில் குடும்பமாக கலந்து கொண்டார். அங்கு தேவன் பரிபூரண சுகத்தையும் விடுதலையையும் கொடுத்தார். அதன் மூலம் குடும்பமாக இயேசுவை ஏற்றுக் கொண்டார்கள். பின்பு ரேவ்லா பாய் தன்னை ஊழியம் செய்ய அர்ப்பணித்து, சொந்தக் கிராமமாகிய ஜாம்லாவில் ஊழியம் செய்ய ஆரம்பித்தார். இவருடைய சொந்த நிலத்தில், தூபாய், சகோ. சாமுவேல் நடராஜன் அவர்கள் குடும்பத்தின் சார்பில் வழங்கப்பட்ட நிதி உதவியின் மூலம் ஆலயம் கட்டப்பட்டது. இந்த ஆலயம் சோட்டா உதய்பூர் பகுதியிலுள்ள அனைத்து ஷாலோம் சபைகளுக்கும் பயிற்சி மைய ஆலயமாக செயல்பட்டு வருகிறது. இந்த ஆலயத்தை 01-12-2014 அன்று பேராயர். தேவதாஸ் அவர்கள் தலைமையில் சகோ. சாமுவேல் நடராஜன் அவர்கள் ஜெபித்து, பிரதிஷ்டை செய்தார்கள்.

---

## ஷாலோம் கிராம ஆலயம்

# வால்பூர்

### மத்தியப்பிரதேசம்



வால்பூர் என்ற கிராமம் மத்தியப்பிரதேசத்திலுள்ள அராஜ்பூர் தாலுகாவில் அமைந்துள்ளது. இந்தக் கிராமத்தில் உள்ள மக்கள் சாராயம் குடிப்பவர்களாக பாவத்திலும் அந்தகாரத்திலும் வாழ்பவர்கள். சகோ.டும்லா காட் அவர்களின் மனைவி வதி பேன் 10 வருடங்களாக சுகவீனமாக இருந்தார்கள். ஊழியர்.ஜான்சிங் சௌகான் இயேசுவைப் பற்றிக் கூறி ஜெபித்த போது இவருடைய மனைவி சுகம் பெற்றார்கள். பின்பு டும்லா காட் ஊழியம் செய்ய தன்னை அர்ப்பணித்து, தனது சொந்தக் கிராமத்தில் 2002-ம் ஆண்டு ஊழியம் செய்ய ஆரம்பித்தார். தற்போது சபையில் 100 குடும்பங்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டு, ஆராதித்து வருகிறார்கள். ஊழியர்.டும்லா காட் அவர்களின் சொந்த நிலத்தில் பெரிய ஆலயம் கட்டப்பட்டு, தூபாய், சகோ. சாமுவேல் நடராஜன் அவர்கள் குடும்பத்தின் சார்பில் வழங்கப்பட்ட நிதி உதவியின் மூலம் ஆலயம் கட்டப்பட்டு, 01-12-2014 அன்று பேராயர். தேவதாஸ் அவர்கள் தலைமையில் சகோ. சாமுவேல் நடராஜன் அவர்கள் ஜெபித்து, பிரதிஷ்டை செய்தார்கள்.

## ஷாலோம் கிராம ஆலயம்



# பாடல்வா மத்தியப்பிரதேசம்

பாடல்வா என்ற கிராமம் மத்தியப்பிரதேசத்திலுள்ள ஜாபுவா மாவட்டத்திலுள்ள ராணாப்பூர் தாலுகாவில் அமைந்துள்ளது. இந்தக் கிராமத்தில் வாழும் மக்கள் சாராயம், திருட்டு, விபச்சாரம் போன்ற பாவங்களுக்கு அடிமையாக வாழ்பவர்கள். சகோ. ரமேஷ் எம். வசுனியா அவர்களின் குடும்பம் முழுவதும் பிசாசின் பிடியிலிருந்தார்கள். விடுதலைக்காக எவ்வளவோ மந்திரம் மற்றும் மருத்துவம் பார்த்தும் எந்த பலனுமில்லை. கடைசியாக உறவினர் மூலம் இயேசுவைக் குறித்துக் கேள்விப்பட்டு, ஷாலோம் கூட்டத்தில் பங்கு பெற்று விடுதலை பெற்றார்கள். அதன் மூலம் சகோ. ரமேஷ் வசுனியா அவர்கள் குடும்பம் இயேசுவை ஏற்றுக் கொண்டார்கள். பின்பு ஊழியம் செய்ய தன்னை அர்ப்பணித்து, தனது சொந்த கிராமமாகிய பாடல்வா–வில் ஊழியம் செய்ய ஆரம்பித்தார். தற்போது 300 குடும்பங்கள் இயேசுவை ஏற்றுக் கொண்டு சபையில் ஆராதித்து வருகிறார்கள். இவரது சொந்த நிலத்தில், துபாய், சகோ. சாமுவேல் நட ராஜன் அவர்கள் குடும்பத்தின் சார்பில் வழங்கப்பட்ட நிதி உதவியின் மூலம் ஆலயம் கட்டப்பட்டு, 01–12–2014 அன்று பேராயர். தேவதாஸ் அவர்கள் தலைமையில் சகோ. சாமுவேல் நட ராஜன் அவர்கள் ஜெபித்து, பிரதிஷ்டை செய்தார்கள்.

---

## எழுந்து கட்டுவோம் வாருங்கள்



**இந்த 2015ஆம் வருடத்தில் ரூ. 5 இலட்சங்கள், ரூ. 3 இலட்சங்கள், ரூ. 2 இலட்சங்கள் நிதி உதவி கொடுத்து, 50x20, 40x20, 35x20 அளவுகளில் 100 கிராம ஆலயங்களைக் கட்டிக் கொடுக்க முன் வாருங்கள்**

- ரூ. 2 இலட்சங்கள் நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் 100 பேர்கள்
- ரூ. 1 இலட்சம் நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் 200 பேர்கள்
- ரூ. 50,000 நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் 400 பேர்கள்
- ரூ. 20,000 நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் 1000 பேர்கள்
- ரூ. 10,000 நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் 2000 பேர்கள்

  ரூ. 2 இலட்சங்கள், கொடுக்கக்கூடிய ஆதரவாளர்களுக்கு தனியான சபை கட்டுமானப்பணி கொடுக்கப்பட்டு, ஆலய பிரதிஷ்டை DVD மற்றும் புகைப்படங்கள், அறிக்கை அனுப்பி வைக்கப்படும். **மற்ற நிதியாளர்களுக்கு இணைந்து கட்டப்பட்ட ஆலயத்தின் படங்கள், DVD மற்றும் அறிக்கைகள் அனுப்பி வைக்கப்படும்.**

- உங்கள் சபையில் சிறப்புக் காணிக்கையைக் கொடுப்பவர்களை ஏழுப்பி சபை மூலமாக ஆலயங்கள் கட்ட முன்வாருங்கள்.
- உங்கள் குடும்பத்தின் சார்பில் அல்லது நீங்களும் உங்கள் உறவினர்கள் குடும்பங்களுடன் இணைந்து ஆலயம் கட்டிக் கொடுக்க முன்வாருங்கள்.

## சகோ. சாமுவேல் நடராஜன் (துபாய்) அவர்களின் பணித்தள வருகை அறிக்கை

கர்த்தருடைய பெரிதான கிருபையால் கடந்த டிசம்பர் மாதம் 1& 2–ம் தேதிகளில் துபாயிலிருந்து **சகோ. சாமுவேல் நடராஜன்** அவர்கள் குடும்பமும், **போதகர். ராட்னி** அவர்களும் வருகை தந்திருந்தார்கள். 1–ம் தேதி **சகோ. சாமுவேல் நடராஜன்** அவர்கள் குடும்பத்தின் சார்பில் அளிக்கப்பட்ட நிதியுதவியில் மத்தியப்பிரதேசத்திலுள்ள புதிதாக கட்டப்பட்டுள்ள பாடல்வா ஆலயத்தை **பேராயர். தேவதாஸ்** அவர்கள் தலைமையில் **சகோ. சாமுவேல் நடராஜன்** அவர்கள் ஜெபித்து தேவ நாம மகிமைக்காக பிரதிஷ்டை செய்தார்கள். ஆராதனை வேளையைத் தொடர்ந்து **சகோ. சாமுவேல் நடராஜன்** அவர்கள் தங்கள் சாட்சியோடு வாழ்த்துச்செய்தியை பகிர்ந்து கொண்டார்கள். **பேராயர். தேவதாஸ்** அவர்கள் மொழிபெயர்த்தார்கள். பின்பு **சகோதரி. மார்லின் சாமுவேல்** அவர்கள் சிறப்பு பாடல் ஒன்றைப் பாடினார்கள். தொடர்ந்து **போதகர். ராட்னி** அவர்கள் தேவ செய்தியளித்தார்கள். பிரதிஷ்டை ஆராதனை ஆசீர்வாதமாக இருந்தது. கலந்துக் கொண்ட அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டது. தொடர்ந்து மத்தியப்பிரதேசத்திலுள்ள வால்பூர் கிராமத்தில் புதிதாக கட்டப்பட்ட ஆலயத்தை **பேராயர். தேவதாஸ்** அவர்கள் தலைமையில் **சகோ. சாமுவேல் நடராஜன்** அவர்களும் **திருமதி. மார்லின் சாமுவேல்** அவர்களும் ஜெபித்து பிரதிஷ்டை செய்தார்கள். தொடர்ந்து **சகோ. சாமுவேல் நடராஜன்** அவர்களும் **சகோதரி. மார்லின்** அவர்களும் தங்கள் சாட்சியோடு வாழ்த்துச் செய்தியையும் பகிர்ந்து கொண்டார்கள். ஆலய பிரதிஷ்டை ஆராதனை மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது. கலந்துக் கொண்ட விசுவாசிகள் அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து குஜராத்திலுள்ள சோட்டா உதய்பூர் பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஜாம்லா ஆலயத்தைப் பார்வையிட்டு, ஊழியரையும் மூப்பர்களையும் சந்தித்து, ஜெபித்தார்கள். முதல் நாள் ஊழியங்கள் ஆசீர்வாதமாக இருந்தது. 2–ம் தேதியன்று **பேராயர். தேவதாஸ்** அவர்களுடன் குஜராத்திலுள்ள கொலானா, பாரேவா, ரீசும்புரா ஆகிய கிராம ஆலயங்களையும் ஊழியரையும் சந்தித்து ஜெபித்தார்கள். அதைத் தொடர்ந்து இராஜஸ்தானிலுள்ள நமது ஷாலோம் மிஷன் பள்ளியையும், விடுதியையும் பார்வையிட்டு, மாணவர்களை சந்தித்து ஜெபித்தார்கள். பின்பு அனைத்து மாணவர்களுக்கும் பிஸ்கட்கள் வழங்கினார்கள்.


அதைத் தொடர்ந்து ஷாலோம் கோய்கா பேராலயத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்தில் **சகோதரி. மார்லின்** அவர்கள் சிறப்புப் பாடலை பாடினார்கள். அதைத் தொடர்ந்து **சகோ. சாமுவேல் நடராஜன்** அவர்கள் தனது சாட்சியோடு வாழ்த்துச் செய்தியைப் பகிர்ந்து கொண்டார்கள். அதைத் தொடர்ந்து **போதகர். ராட்னி** அவர்கள் தேவ வார்த்தையைப் பகிர்ந்து கொண்டார்கள். **சகோ. கேரட்** அவர்கள் மொழிபெயர்த்தார்கள். கூட்டம் ஆசீர்வாதமாக இருந்தது. கலந்து கொண்ட அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டது. இரண்டாம் நாள் ஊழியங்களும் ஆசீர்வாதமாக இருந்தது. **தேவனுக்கே மகிமை!**

## பீல் மக்கள் மத்தியில் நடைபெறும் எழுப்புதல் பணியைக் குறித்து சகோ. சாமுவேல் நடராஜன் அவர்கள் குடும்பத்தார் கூறுவது

- ❖ தேவனுடைய தரிசனம் மற்றும் அழைப்பின் பேரில் பீல் மக்கள் மத்தியில் ஒன்றுமில்லாத இடத்திலிருந்து தேவனுடைய சாம்ராஜ்ஜியத்தைக் கட்டியெழுப்பியதை (From Nothing to Gods Kingdom) கண்டு தேவனைத் துதித்தோம்.
- ❖ 4 கிராம ஆலயங்களுக்கு கொடுத்த நிதி உதவி மிக நேர்த்தியாக செலவிடப்பட்டு அழகாக ஆலயங்கள் கட்டப்பட்டுள்ளது. குறிப்பாக சுதேச ஊழியர்கள் நிலத்தை அர்ப்பணிப்பதும்; கட்டுமான பணிக்கான (Labour Work) பொறுப்பை அவர்களே ஏற்று ஆலயங்கள் கட்டுவது மிகப் பாராட்டத்தக்கது.
- ❖ தேவன் தந்த ஷாலோம் சுதேச ஊழியர்கள் மிகவும் இயேசுவை நேசிக்கிறார்கள். உண்மையாய் தேவனுக்காக வைராக்கியமாய் ஊழியம் செய்கிறார்கள்.
- ❖ பீல் மக்கள் அசுத்த ஆவிகள் கட்டுகளிலும், மந்திரவாதிகளின் பிடியிலும், குடியும், கொள்ளைக்காரர்களுமாய் இருந்தவர்கள் இயேசு கிறிஸ்துவில் முழுமையாக மாறி சாட்சிகளாய் இருப்பது எத்தனை ஆச்சரியம்.
- ❖ பீல் ஆதிவாசி சிறுவர்கள் ஆவியில் நிறைந்து பாடல்களைப் பாடி நடனமாடி வசனங்கள் சொல்லுவதும்; கண்ணீருடன் ஜெபிப்பதும் எங்கள் உள்ளத்தை வெகுவாக தொட்டது.
- ❖ இராஜஸ்தான் பிஜல்பூர் கிராமத்தில் உள்ள ஷாலோம் பள்ளிக்கூடம் L.K.G. முதல் 8 வரை நடைபெறுகிறது. பள்ளிக்கூட கட்டிடம்; விடுதி கட்டிடம் சரியான வசதிகள் இல்லை. Hostel மாணவர்கள் தங்களுக்கு தேவன் கொடுத்த உணவிற்காக ஜெபிப்பதை கண்டபோது மனம் நெகிழ்ந்தது. தேவன் ஷாலோம் ஊழியத்தின் மூலம் பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் கட்டி எழுப்ப வேண்டும்.
- ❖ ஷாலோம் பணித்தள அலுவலக ஊழியர்கள் மற்றும் Project ஊழியர்கள் அனைவரும் உண்மையாக, அர்ப்பணிப்புடன் தேவனுக்காக வைராக்கியமாக ஊழியம் செய்கிறார்கள். அனைத்தையும் வழிநடத்தி செல்லும் **பேராயர். தேவதாஸ்** அவர்கள் முழு குடும்பத்திற்காகவும் தேவனைத் துதிக்கிறேன்.

அன்பானவர்களே, நீங்கள் கட்டாயம் ஒருமுறை பணித்தளம் சென்று வாருங்கள்,ஷாலோம் ஊழியத்திலுள்ள பீல் மக்களுக்காக ஜெபியுங்கள். ஊழியங்களைத் தாங்கவும், ஆதிவாசி மாணவர்கள் கல்விப் பணியை தாங்கவும், ஆலயங்கள் கட்டிக் கொடுக்கவும் முன்வாருங்கள். **தேவனுக்கே மகிமை!**

### *உங்களுக்காக ஜெபிக்கிறோம்...*



**அன்பான ஆதரவாளர்களே!** உங்களுக்காகவும் உங்களது குடும்பத்திற்காகவும் நாங்கள் தொடர்ந்து ஜெபித்து வருகிறோம். மேலும் உங்களது ஜெபக் குறிப்புகளை **அன்பு பகிர்வு இயக்கம்** தலைமை அலுவலகத்திற்கு கடிதம் மூலமாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ தெரியப்படுத்தினால் நாங்கள் உங்களுக்காக விசேஷமாக ஜெபிக்க ஆயத்தமாயிருக்கிறோம்.
**தொடர்புக்கு : போன் : 9698044522**

## **போதகர். ஜார்ஜ் ராபர்ட்** (Praise Tower city church, Chennai) அவர்கள் **குடும்பத்தினரின் பணித்தள வருகை**

தேவ கிருபையால் கடந்த நவம்பர் மாதம் 18–ம் தேதி முதல் 20–ம் தேதி வரை சென்னையிலிருந்து போதகர்.ஜார்ஜ் ராபர்ட்(சென்னை) அவர்கள் குடும்பமாக பணித்தளத்திற்கு வருகை வந்திருந்தார்கள். 18–ம் தேதியன்று **பேராயர். தேவதாஸ்** அவர்களுடன் குஜராத்திலுள்ளநகராலா கிராமத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த விசேஷக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். அந்தக் கூட்டத்தில் சுமார் 1000 விசுவாசிகள் மற்றும் மூப்பர்கள் கூடியிருந்தார்கள். கலாச்சார முறையின்படி பேராயர் குடும்பத்திற்கும் போதகர் குடும்பத்திற்கும் வரவேற்பு அளிக்கப்பட்டது. தொடர்ந்து **போதகர். ஜார்ஜ் ராபர்ட்** அவர்கள் தேவ வார்த்தையைப் பகிர்ந்து கொள்ள **பேராயர். தேவதாஸ்** அவர்கள் மொழிபெயர்த்தார்கள். கூட்டம் ஆசீர்வாதமாக இருந்தது. கலந்து கொண்ட அனைவருக்கும் விசேஷ பிரார்த்தனை ஏறெடுக்கப்பட்டது. அதன் பின் பான்டிக்கேடி கிராம ஆலயத்தையும் ஊழியர் குடும்பத்தையும் சந்தித்து ஜெபித்தார்கள்.

19–ம் தேதியன்று **Praise Tower city church** சார்பில் கொடுக்கப்பட்ட நிதியுதவியின் மூலம் இராஜஸ்தானில் பான்ஸ்வாடா மாவட்டத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள சாகுவா என்ற கிராம ஆலயத்தின் பிரதிஷ்டை ஆராதனை நடைபெற்றது. தேவ நாமம் மகிமைக்காக கட்டப்பட்ட ஆலயத்தை **பேராயர். தேவதாஸ்** அவர்கள் தலைமையில் **போதகர். ஜார்ஜ் ராபர்ட்** அவர்கள் ஜெபித்து பிரதிஷ்டை செய்தார்கள். தொடர்ந்து **போதகர். ஜார்ஜ்** அவர்கள் தேவ செய்தியளிக்க **பேராயர். தேவதாஸ்** அவர்கள் மொழிபெயர்த்தார்கள். பிரதிஷ்டை ஆராதனை ஆசீர்வாதமாக இருந்தது. அதைத் தொடர்ந்து இராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள நமது ஷாலோம் பள்ளி மற்றும் விடுதியை பார்வையிட்டார்கள். மேலும் புதிதாக கட்டப்பட்டுள்ள கொய்கா கிராம பேராலயத்தை பார்வையிட்டார்கள்.

பணித்தளப் பார்வையின் 3–ம் நாளான 20–ம் தேதியன்று மத்தியப்பிரதேசத்திலுள்ள ஹக்வானி என்ற இடத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட விசேஷக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். சுமார் 1500 பேர் அந்த கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். அங்கு போதகரின் குடும்பத்தாருக்கு கலாச்சார வரவேற்பளிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து தேவ வார்த்தையை **போதகர். ஜார்ஜ்** அவர்கள் பகிர்ந்து கொள்ள **பேராயர். அவர்கள்** மொழிபெயர்த்தார்கள். கலந்து கொண்ட அனைவரும் ஆசீர்வதிக்கப்பட்டனர். பின்பு மத்தியப்பிரதேசத்திலுள்ள பிப்பிலிப்பாடா என்ற கிராமத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள கிராம ஆலயத்தின் பிரதிஷ்டை ஆராதனை நடைபெற்றது. **போதகர். ஜார்ஜ் ராபர்ட்** அவர்கள் குடும்பத்தினரின் மூலம் கொடுக்கப்பட்ட நிதியுதவியின் மூலம் கட்டப்பட்ட ஆலயத்தை **பேராயர். தேவதாஸ்** அவர்கள் தலைமையில் **போதகர். ஜார்ஜ்** அவர்கள் ஜெபித்து தேவ நாமம் மகிமைக்காக பிரதிஷ்டை செய்தார்கள். துதிப் பாடலுடன் அனைவரும் ஆலயத்திற்குள் நுழைந்தனர். தொடர்ந்து **போதகர். ஜார்ஜ்** அவர்கள் செய்தியளிக்க **பேராயர். தேவதாஸ்** அவர்கள் மொழிபெயர்த்தார்கள். கலந்து கொண்ட அனைவரும் ஆசீர்வதிக்கப்பட்டனர். ஜெபத்துடன் பிரதிஷ்டை ஆராதனை நிறைவு பெற்றது. அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டது.

## ஷாலோம் ஊழியங்களைக் குறித்து போதகர். ஜார்ஜ் ராபர்ட் அவர்கள் கூறுவது:

2013–ம் வருடம் டிசம்பர் மாதத்தில் பஞ்சாப், காஷ்மீர் ஊழியங்களை முடித்து பிரயாணப்பட்டு புதுதில்லிலி வருகையில் ஆவியானவரின் வழிநடத்துதலிலின்படி பேராயர்.தேவதாஸ் அவர்களை சந்திக்க தேவன் உதவி செய்தார். இந்த சந்திப்பில் ஆவியானவர் மிக நெருக்கமாக இந்த ஊழியத்துடன் பிணைப்பைக் கொடுத்தார்.

- ஷாலோம் ஊழியம் **பேராயர். தேவதாஸ்** அவர்கள் குடும்பத்துக்கு தேவன் பிரத்தியேகமாக கொடுத்த தரிசன ஊழியம்.
- இந்தியாவில் பல ஜாதி மக்கள் இருந்தாலும் பீல் ஆதிவாசி மக்கள் இரட்சிப்பிற்காக ஷாலோம் ஊழியத்தை ஏற்படுத்தியிருக்கிறார்.
- தேவன் தந்த அழைப்பிலும் தரிசனத்திலும் **பேராயர். தேவதாஸ்** அவர்கள் குடும்பம் அர்ப்பணிப்போடு தெளிவான வழிநடத்துதலோடு எள்ளளவும் அங்கும் இங்கும் தடுமாறாமல் தேவ வசனத்துக்கு கீழ்ப்படிந்து ஊழியம் செய்வதைக் கண்டோம்.
- 23 வருடங்களில் இந்திய திருச்சபை வரலாற்றில் இலட்சக்கணக்கான ஆத்துமாக்களுடன் ஷாலோம் திருமண்டலம் உருவாகியிருக்கிறது. தேவனுக்கே மகிமை!
- அழைத்த தேவன் உண்மையுள்ளவர். பரிசுத்தவான்கள், தேவ ஊழியர்கள், சபைப் போதகர்கள் மற்றும் தேவ பிள்ளைகளின் உள்ளங்களை ஏவி அற்புதமாக ஊழியங்களை ஆண்டவர் நடத்தி வருகிறார்.
- வலதுகைக்கும், இடதுகைக்கும் வித்தியாசம் தெரியாத, அந்தகாரத்தில் வாழ்ந்து வந்த பீல் ஆதிவாசி மக்கள், விசுவாசிகள், மூப்பர்கள், ஊழியர்கள் என்று சபைகளைக் காணும் போது தெய்வீக விடுதலை மற்றும் ஆவியானவருடைய அபிஷேகம் மற்றும் மகிமையான ஆராதனை இவைகள் மறக்கமுடியாதவை.
- அன்பானவர்களே! ஷாலோம் பணித்தளத்திற்கு சென்று பாருங்கள். குறிப்பாக சபைப் போதகர்கள் சென்று பாருங்கள். இந்த ஷாலோம் ஊழியத்தையும், மிஷனெரிகளையும், பீல் ஆதிவாசி பிள்ளைகளையும் தாங்கி, ஆலயங்களைக் கட்டிக் கொடுக்க முன் வாருங்கள். தேவன் உங்களை நிச்சயம் ஆசீர்வதிப்பார்...

**போதகர். ஜார்ஜ் ராபர்ட் & சகோதரி. பிரிசில்லா ஜார்ஜ்**

(Praise Tower City church, Chennai)

---

***"சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர்மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற் போகான் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" ... மத்தேயு 10 : 42***

# Pr. ஜார்ஜ் ராபர்ட் (Praise Tower City Church, Chennai) அவர்களின் பணித்தள வரு



வாணி கிராம ஆலயத்தில் அளிக்கப்பட்ட கலாச்சார வரவேற்பு



சிறப்புக் கூடுகையில் கூடியிருந்த வாக்வாணி விசுவாசிகள்



சிறப்புச் செய்தி - Pr. ஜார்ஜ் ராபர்ட் அவ



சிறப்புச் செய்தி - நகரேலா கிராம ஆலயம்



விசுவாசிகளுக்கான சிறப்பு ஜெபம்



நகரேலா கிராமத்தில் கூடியிருந்த விசுவாசி



ரத்திற்கான சிறப்பு ஜெபம் - சகோதரி பிரிஸ்கில்லா ஜார்ஜ் ராபர்ட்



பிப்லிப்பாடா (ம.பி.) கிராம ஆலயப் பிரதிஷ்டை



சாகுவா (இராஜஸ்தான்) கிராம ஆலயப் பிரதி

## CDC Project அந்தர்வேலியா (ம.பி) மாணவர்களுக்கான கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்


கிறிஸ்துமஸ் செய்தி - சகோ. டைட்டஸ் அவர்கள்


கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தில் பங்கு பெற்ற சிறுவர்கள்


கலை நிகழ்ச்சிகள்

## CDC Project ஜெரி (குஜராத்) மாணவர்களுக்கான கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் -


ஸ்துமஸ் கொண்டாட்டத்தில் பங்கு பெற்ற சிறுவர்கள்


கலை நிகழ்ச்சிகள்


கிறிஸ்துமஸ் கேக் வெட்டி கொண்டாடும் சிறு

## பீல் ஆதிவாசி சிறுவர்களுக்கான ஷாலோம் சிறுவர் முகாம்


பாடல் மற்றும் ஆராதனை வேளை


சிறப்புச் செய்தி - சகோதரி. வஹிதா தேவதாஸ்


குழு கலந்துரையாடல்

# தேவனிடம் வேண்டிக் கொள்ளுங்கள்



**ஒரு கோடி பீல் ஆதிவாசி மக்களின் இரட்சிப்பிற்காக.**

✞ குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் வசிக்கும் ஒரு கோடிக்கும் அதிகமான பீல் ஆதிவாசி மக்கள் அனைவரும் நமது தலைமுறையில் இரட்சிக்கப்படவும், அவர்கள் வசிக்கும் 7000 கிராமங்களிலும் ஊழியர்கள் மற்றும் சபைகள் எழுப்பப்படவும் ஜெபியுங்கள்.

**பேராயர். தேவதாஸ் அவர்கள் குடும்ப நலனுக்காக.**

✞ **பேராயர். தேவதாஸ்,** அவர்களின் துணைவியார் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** மற்றும் பிள்ளைகளுக்காகவும் ஜெபியுங்கள். தேவன் தாமே அவர்களுக்குத் தமது ஞானத்தையும், கிருபைகளையும் தந்து ஊழியங்களை நடத்திச் செல்லவும், நல்ல சுகத்தையும், பெலத்தையும், பிரயாணங்களில் பாதுகாவலையும் தேவன் தந்து, விசேஷித்த அபிஷேகத்தின் வல்லமையால் நிரப்பப்படவும் ஜெபியுங்கள். தேவன் பேராயர் குடும்பத்தைப் பீல் மக்களுக்கு மட்டுமன்றி தேசத்திற்கும் ஆசீர்வாதமாகப் பயன்படுத்த ஜெபியுங்கள்.

**கிராம ஆலயங்களுக்காக**

✞ தேவன் தந்த தரிசனத்தின்படி, பீல் ஆதிவாசி ஜனங்களின் மத்தியில் இந்த 2015 ஆம் ஆண்டிற்குள்ளாக 100 கிராம ஆலயங்களைக் கட்டும் தேவ பணியில் ஜெபித்து செயல்பட்டு வருகிறோம். இதற்கு எதிராக வரும் தடைகளை தேவன் நீக்கும்படியாகவும், இதற்கான தேவைகளைச் சந்திக்க தேவன் ஆதரவாளர்களை எழுப்பித் தரும்படியாகவும் ஜெபியுங்கள்.

**பணித்தளங்களில் வெள்ளிதோறும் நடைபெறும் சுகமளிக்கும் ஆராதனைகளுக்காக**

✞ பணித்தளங்களில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நடைபெறும் சுகமளிக்கும் ஆராதனைகளுக்காக ஜெபியுங்கள். இந்த ஆராதனைகளில் உடலிலும் மனதிலும் குறையுள்ள ஜனங்கள் அநேகர் பங்குபெறவும், இதன் மூலம் அற்புதங்களையும் ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொண்டு தேவனண்டையில் சேர்க்கப்படவும் ஜெபியுங்கள்.

**ஊழியங்களுக்காக ஜெபிப்போரும் ஊழியங்களைத் தாங்குவோரும் எழுப்பப்பட**

✞ தேவன் தந்த தரிசனத் திட்டமான ஒரு கோடி பீல் ஆதிவாசி மக்களின் இரட்சிப்பின் பணியில் நடைபெறும் இந்த மாபெரும் ஊழியத்தினை ஜெபத்தில் தாங்கக் கூடிய ஜெபப் பங்காளர்களை ஒவ்வொரு மாநிலத்திலும் மாவட்டங்களிலும் எழுப்பவும், இந்த மாபெரும் திட்டப்பணியின் தேவைகள் சந்திக்கப்பட அநேக ஆதரவாளர்கள் மற்றும் ஊழிய பிரதிநிதிகள், தன்னார்வத் தொண்டர்கள் எழுப்பப்படவும் ஜெபியுங்கள்.

**ஷாலோம் சேரிட்டி மிஷனின் வளர்ச்சிக்காக.**

✞ ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலம் தாங்கப்படும் ஹாஸ்டல் பிள்ளைகள், பிஜல்பூர் பள்ளி மாணவர்கள், வீட்டிலிருந்து கல்வி பயின்று வரும் பிள்ளைகள், பராமரிக்கப்படும் பிள்ளைகள் யாவருக்கும் தேவன் நல்ல ஞானத்தையும், பாதுகாவலையும், சுகத்தையும் கொடுத்து வழி நடத்தும்படியாக ஜெபியுங்கள்.

**ஷாரோன் நினைவு மருத்துவமனைக்காக**

✞ பணித்தளத்தில் செயல்பட்டு வரும் **ஷாரோன் நினைவு மருத்துவமனைக்காகவும்**, அதில் பொறுப்பேற்றுள்ள **Dr. இன்பக்குமார்** அவர்களுக்காகவும், இந்த மருத்துவமனை மூலம் அநேக ஏழை ஆதிவாசி ஜனங்கள் பயனடையவும், இதன் தேவைகள் அனைத்தும் சந்திக்கப்பட்டு, தேவ நாமம் மகிமைப்படவும் ஜெபியுங்கள்.

**ஷாலோம் தலைமை மற்றும் கிளை அலுவலகங்களுக்காக**

✞ தூத்துக்குடி தலைமை அலுவலகம், குஜராத் பணித்தள அலுவலகம், சென்னை, மும்பை, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில் மற்றும் மார்த்தாண்டம் கிளை அலுவலகங்களில் தேவனுடைய ஊழியத்தினை நிறைவேற்றி வரும் நமது சகோதர சகோதரிகளுக்காகவும், மேலும் ஊழியத்தில் தன்னார்வமாய் செயல்பட்டு காணிக்கைகளைச் சேகரித்து அனுப்பும் பிரதிநிதிகளுக்காகவும் பாரத்தோடு ஜெபியுங்கள்.

**புதிய நாகர்கோவில் ஷாலோம் கிளை அலுவலகத்திற்காக**

✞ நாகர்கோவிலில் புதிதாய் ஆரம்பிக்கப்பட்டுள்ள கிளை அலுவலகத்தை தேவன் ஆசீர்வதிக்கவும், அங்கு பணிபுரியும் தேவ பிள்ளைகளை தேவன் ஆசீர்வதிக்கவும், மேலும் அநேக தேவ ஜனங்கள் வந்து ஜெபித்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும், இந்த அலுவலகம் பீல் மக்களின் இரட்சிப்பின் பணியில் ஒரு தூணாய் விளங்கவும் ஜெபியுங்கள்.

**புதிய ஆண்டிற்காக**

✞ இந்தப் புதிய ஆண்டில் தேவன் நமது வாழ்க்கையிலும் ஊழியங்களிலும் தருகின்ற வாக்குத்தத்தங்களையும் ஆசீர்வாதங்களையும் நிறைவேற்றவும், இந்தப் புதிய ஆண்டு மிகவும் ஆசீர்வாதமான ஆண்டாக அமையவும், இந்த ஆண்டில் தேவன் ஊழியப்பாதையில் தந்துள்ள அனைத்து திட்டங்களை நிறைவேற்ற கிருபை தரவும் ஜெபியுங்கள்.

✞ பணித்தளங்களில் இந்த ஆண்டில் நிவேற்றப்படவிருக்கும், சிறப்புக் கூடுகைகளுக்காகவும், பெண்கள், மூப்பர், வாலிபர் மற்றும் சிறுவர் முகாம்களுக்காகவும் தேவைகளை சந்திக்கவும் ஜெபியுங்கள்

✞ பணித்தளங்களில் காணப்படும் எதிர்ப்புகளை தேவன் மாற்றவும், நல்ல திறந்த வாசலை ஊழியங்களுக்குத் தரவும் ஜெபியுங்கள்.

**ஊழியங்களுக்காக ஜெபிப்போரும் ஊழியங்களைத் தாங்குவோரும் எழுப்பப்பட**

✞ தேவன் தந்த தரிசனத் திட்டமான ஒரு கோடி பீல் ஆதிவாசி மக்களின் இரட்சிப்பின் பணியில் நடைபெறும் இந்த மாபெரும் ஊழியத்தினை ஜெபத்தில் தாங்கக் கூடிய ஜெபப் பங்காளர்களை ஒவ்வொரு மாநிலத்திலும் மாவட்டங்களிலும் எழுப்பவும், இந்த மாபெரும் திட்டப்பணியின் தேவைகள் சந்திக்கப்பட அநேக ஆதரவாளர்கள் மற்றும் ஊழிய பிரதிநிதிகள், தன்னார்வத் தொண்டர்கள் எழுப்பப்படவும் ஜெபியுங்கள்.



# ஷாலோம் - வேத வினாப் போட்டி 20

**பதில் எழுதுக :**

1. யாருக்காக ஜெபம் பண்ண வேண்டும்?
2. யாருடைய சந்தோஷம் ஒரு நிமிஷம் மாத்திரம் நிற்கும்?
3. ஏழு வயதிலே ராஜாவானவன் யார்?
4. சாலொமோன் எருசலேமிலே இஸ்ரவேலை அரசாண்ட நாட்கள் எத்தனை?
5. யார் பலத்த பராக்கிரமசாலி–யாயிருந்தான்?
6. ஆண்டவரே பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று சொன்னவன் யார்?
7. கொர்நேலியு என்னும் நூற்றுக்கதிபதி எந்தப்பட்டணத்தில் இருந்தான்?
8. நியாயப்பிரமாணம் எதை உண்டாக்குகிறது?
9. எது மரணத்தை உண்டாக்குகிறது?
10. யார் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக் கொள்வான்?

**வேதவினாப் போட்டியில் பங்கு பெறும் வாசகர்களுக்கான நிபந்தனைகள் :**

1. விடைகள் யாவும் தகுந்த வேத ஆதாரத்துடன் இருக்க வேண்டும்.
2. கேள்வி எண்ணைக் குறிப்பிட்டு பதில்களை மட்டும் எழுதினால் போதும்.
3. பரிசு பெறுபவர் ஒன்றுக்கு மேற்பட்டவராக இருப்பின் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படுவர்.
4. விடைகளை எழுதும் போது தவறாமல் உங்கள் விலாசம், போன் நம்பர் போன்றவற்றையும் சேர்த்து எழுதவும்.
5. பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : **17.01.2015**

**கடந்த மாத வேத வினா போட்டி எண் 19க்கான சரியான விடைகள் :**

| | |
|---|---|
| 1. செம்மையானவர்களுக்கு. சங். 112 : 4 | 6. யூதாவின் மனுஷர். ஏசா. 5 : 7 |
| 2. ஞானம். பிரசங்கி 10 : 10 | 7. ஆமோஸ். 6 : 12 |
| 3. லோபியின். ஏசா. 32 : 7 | 8. யேகோவாநிசி. யாத். 17 : 15 |
| 4. சம பூமியாகும். சகரியா 4 : 7 | 9. அயனங்களிலிருந்து. நியா. 5 : 20 |
| 5. சூலமித்தி. உன். 6 : 13 | 10. ஏதோமியர். மல்கியா 1 : 4 |

**கடந்த மாத வேத வினாப் போட்டி எண் 19 இல் சரியான விடையினைத் தகுந்த நேரத்திற்குள் எழுதி அனுப்பிய 17 நபர்களில் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டு பரிசு பெற்றவர்கள்.**

1. **Sis.** மேபல் சாமுவேல், சென்னை.
2. **Sis.** ஆலிவ் ஜெயபாலன், கோவை. 3. **Sis. D.** வயோலா மர்காஷிஸ், நாசரேத்.

**பதில்களை அனுப்ப வேண்டிய முகவரி**


**SHARING LOVE MISSION**

New No. 5A/323, Old.No. 5/168, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.
Phone: 0461 - 2375468, Cell : 9345675468

## ஷாலோம் கிளை அலுவலகங்களின் முகவரிகள்

**HEAD OFFICE**

**M/S. SHARING LOVE MISSION,**

New No. 5A/323, Old No. 5/168,-3rd Street, Caldwell Colony,
TUTICORIN-628008 Ph. : 2377737, 2375468, Cell : 9345675468

**CHENNAI BRANCH OFFICE**

**Bro. John Jeyasingh**
No.102-2nd Main Road
Sathya Nagar, Padi,
CHENNAI - 600050.
Cell : 9698244577

**MARTHANDAM BRANCH OFFICE**

**Bro. Selvadurai.G**
Bethel,
25-7/A 1-Block 25, Paruthivilai,
Kannakode, Marthandam - 629165
Cell : 9487689869

**MUMBAI BRANCH OFFICE**

**Bro. Prabhakaran. P.**
C/o. Mr. P.Immanuel,
C-2, Plot No.123-Old Mhada Colony,
Mangalya Co.Op.Society Ltd,
Pokharan Road No.2,
Thane West - 400610
Cell : 9768282699

**NAGERCOIL BRANCH OFFICE**

**Bro. John Sridhar**
Ebenezer Plaza, Parama Street,
WCC Junction,
Nagercoil - 629001
Cell : 9698844511, 9698444522

**MADURAI BRANCH OFFICE**

**Bro. Chandra Paul. S**
6/3, Nellaiappar Puram 7th Street,
Tirunagar (p.o)
MADURAI-625006
Cell : 9698644522

**TIRUNELVELI BRANCH OFFICE**

**Bro. David. R**
56 A/4,-C.S.I Church South Street,
(Upstairs) STC road,
Perumalpuram, Palayamkottai
TIRUNELVELI-627007
Cell 9698844599

**குழந்தை ஆதரவுத் தொகை மற்றும்**
**சமுதாயப்பணி காணிக்கைகளை அனுப்ப...**

வங்கிக் கணக்கின் பெயர் : **SHALOM CHARITY MISSION**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

**Tamilnad Mercantile Bank**
**174100710400061**
**Branch : Tiruchendur Road**
(IFS Code : TMBL0000174)

**AXIS BANK**
**105010100096779 -**
(IFS Code : UTIB0000105)

## காணிக்கைகளை அனுப்பும் வழிகள்

- தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்துக் கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- காணிக்கைகளை **E.M.O.** மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அப்படி அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியைக் கொடுக்கும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- **SHARING LOVE MISSION** என்ற பெயருக்கு **D.D.** அல்லது **Cheque** எடுத்து தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு பதிவுத் தபால் அல்லது கொரியர் மூலமாக உங்கள் காணிக்கைகளை அனுப்பலாம்.
- உங்களது வங்கிக் கணக்கிலிருந்து, **Net Transfer** மூலமாகவும் காணிக்கைகளை கீழ்க்கண்ட எங்களது வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பலாம்.
- நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க்கண்ட வங்கிகளில் எங்கள் கணக்குகளில் **Cash (or) Cheque (or) D.D.** மூலம் **Deposit** பண்ணலாம்.
- எங்களது ஷாலோம் கிளை அலுவலகங்களுக்கு நேரடியாக வந்தும் காணிக்கைகளைக் கொடுத்து ஜெபித்துச் செல்லலாம்.

வங்கிக் கணக்கின் பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

**Tamilnad Mercantile Bank**
**A/c. No. : 106100710400009 (I F S Code : TMBL0000106)**

**AXIS BANK**
**A/c. No. : 105010100094373**
**(IFS Code : UTIB0000105)**

**ICICI Bank**
**A/C. No. 613901112799**
**(IFS Code : ICIC0006139)**

நீங்கள் ஷாலோம் ஊழியங்களுக்கு வங்கிக் கணக்குகளில் **Cash (or) Cheque (or) D.D.** மூலமாகவோ அல்லது **Net Transfer** மூலமாகவோ காணிக்கை செலுத்தினால், உடனடியாக அந்தத் தகவலை எங்களுக்குத் தெரியப்படுத்த அன்பாய்க் கேட்கிறோம். அப்படி தெரியப்படுத்தாத பட்சத்தில் எங்களுக்கு யார் காணிக்கை அனுப்பியது என்று தெரியாமல் போய்விட வாய்ப்பு உள்ளது. ஆகவே ஆதரவாளர்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தாங்கள் காணிக்கை செலுத்திய விபரத்தினை எங்களுக்குத் தெரிவியுங்கள். தொடர்புக்கு : 9698244522

## நாட்டு நடப்புச் செய்திகள்

ஆஸ்திரேலியாவிலுள்ள சிட்னியில் நடைபெற்ற உள்நாட்டு கிரிக்கெட்போட்டியில் விளையாடிய, 25 வயதான கிரிக்கெட் வீரர் பில் ஹ்யூஸ் பந்து வீச்சாளர் வீசிய அதிவேக பௌன்சர் பந்தினால் தலையின் பின்புறத்தில் ஏற்பட்ட பலத்த காயத்தினால், கோமா நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அதன் பின் அவர் சுய நினைவு திரும்பாமலேயே காலமானார். இவரது மரணம் உலகளவில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியதாக கிரிக்கெட் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தோனேசியாவிலுள்ள ஜாவா தீவிலுள்ள ஒரு மலைக் கிராமத்தில் ஏற்பட்ட நிலச் சரிவில் அநேகர் பலியாகியுள்ளனர். மேலும் நூற்றுக்கணக்கானோரைக் காணவில்லை. சுமார் 105க்கும் அதிகமான வீடுகள் மண்ணுக்குள் புதைந்துள்ளன. இதனால் மரித்தவர்களின் எண்ணிக்கை கூடும் என அஞ்சப்படுகிறது.

இந்தியப் பெருங்கடல் உள்ளிட்ட சர்வதேச சமுத்திரத்தில் சுமார் 5 லட்சம் கோடிக்கும் அதிகமான பிளாஸ்டிக் துண்டுகள் மிதந்து கொண்டிருப்பதாக ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றின் எடை சுமார் 2 லட்சத்து 70 ஆயிரம் டன் என கணக்கிடப்பட்டுள்ளது. குறிப்பாக பெரிய அளவிலான பிளாஸ்டிக் துண்டுகள் கடற்கரையை ஒட்டியப் பகுதிகளிலும், சிறிய அளவிலான பிளாஸ்டிக் துண்டுகள் கடலின் தொலைதூர பகுதியிலும் இருப்பதாக ஆய்வில் தெரிய வருகின்றன. இந்த பிளாஸ்டிக் துண்டுகளால் கடல் வளம் பெரிதும் பாதிக்கப்படும் அபாயம் உள்ளதாக அந்த ஆய்வு கூறுகின்றது.

நைஜீரியாவின் ஜோஸ் நகரில் பேருந்து நிலையத்திற்கு அருகில் தற்காலிகமாக அமைக்கப்பட்டிருந்த சந்தைப் பகுதியில் இரண்டு தொடர் வெடி குண்டுகள் வெடித்தன. இதில் 31 பேர் மரணமடைந்துள்ளனர்.


**கீழ்கண்ட விலாசத்தில் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்**

தலைமை அலுவலகம்

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168,
Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.
Phone: 0461 - 2375468, 2377737
Cell : 9345675468

பணித்தள அலுவலகம்

**Rt. Rev. Dr. V. DEVADASS**
Founder & General Secretary
Sharing Love Mission
Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat
Ph. : 02673 - 325468
Cell : 09377445468

**email : info@shalommission.in website : www.shalommission.in**

## பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில்
## நடைபெறும் நற்செய்தி பணியில் எனது பங்கு

**(ஜெபித்து தேவையான இடத்தில் ✓ குறியிடவும்)**

☐ நம் தலைமுறையில் பீல் மக்கள் இரட்சிக்கப்பட தினமும் ஜெபிப்பேன்.

☐ எங்கள் பகுதியில் ஷாலோம் ஜெபக்குழு நடத்த முன் வருகிறேன்

☐ ரூ. 2500/– மாதந்தோறும் அனுப்பி பீல் சுதேச ஊழியரை ஜெபித்துத் தாங்க முன் வருகிறேன்.

☐ மாதம் ரூ. 500/– செலுத்தி கிராம ஊழியத்தைத் தாங்க முன் வருகிறேன். (Shalom Village Sponsor)

☐ மாதம் ரூ. 1000/– செலுத்தி ஷாலோம் மிஷன் பங்காளராக முன் வருகிறேன். (Shalom Mission Partner)

☐ ரூ. 700/– மாதந்தோறும் அனுப்பி ஒரு ஆதிவாசி மாணவரைத் தாங்க முன் வருகிறேன். (1 ஆண்டிற்கு ரூ. 8,400) (Shalom Charity Mission)

☐ ரூ. 1 லட்சம் or 2 லட்சம் or 3லட்சம் நிதி உதவி தந்து கிராம ஆலயம் கட்டித் தர முன் வருகிறேன்.

☐ ரூ. 100/– வீதம் பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்கு ......... குஜராத்தி, ஹிந்தி வேதாகமங்கள் வாங்கிக் கொடுக்க விரும்புகிறேன்.

☐ மாதந்தோறும் என்னால் முடிந்த காணிக்கை ரூ. .................. அனுப்பி ஊழியத்தை ஜெபித்துத் தாங்க முன் வருகிறேன்.

☐ இந்த மிஷனெரி பணிக்கு எங்கள் பகுதியில் பிரதிநிதியாக செயல்பட விரும்புகிறேன்.

எனது ஜெபக்குறிப்புகள் / My Prayer Request :

**எனது முகவரி / My Address**

பெயர் / Name ____________________

முகவரி / Address ____________________

____________________

ஊர் / Town ____________________

மாவட்டம் / Dist. ____________________

பின்கோடு / Pin. ____________________

தொலை பேசி/ Ph. ____________________

e-mail ____________________

ஷாலோம் ஊழியங்களைத் தாங்க முன் வருவோர் இந்தப் படிவத்தினை நிரப்பி, கத்தரித்து கீழ்காணும் முகவரிக்கு அனுப்பவும்

**SHARING LOVE MISSION**

New No. 5A/323, Old.No. 5/168, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu. Phone: 0461 - 2375468 Cell : 9345675468
email- info@shalommission.in website:www.shalommission.in

சுதேச ஊழியரின் சாட்சி

## போதகர். கண்ணையாலால் முனியா

### முனியக்கூட்டா, இராஜஸ்தான்



இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். எனது பெயர் கண்ணையாலால் முனியா. நான் இராஜஸ்தானில் பான்ஸ்வாடா மாவட்டத்தில் அமைந்துள்ள கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி, நான் இயேசுவை அறியாமல் இருந்த போது அசுத்த ஆவிகளின் பிடியினாலும், போதை வஸ்துக்களினாலும், மந்திர தந்திரங்களிலும் ஈடுபட்டு இருந்தேன். பின்பு எனது பகுதியில் இயேசுவை பற்றி அறிவிக்கும்படியாக வந்த ஊழியர்களையும், இயேசுவை ஏற்றுக் கொண்ட மக்களையும் அதிகமாக எதிர்த்து, சண்டையிட்டு அவர்களை விரட்டி விடுவேன். இப்படி நான் வாழ்ந்த நாட்களில் எந்தவித சமாதானமும் என்னுள்ளத்தில் இருக்காது. எனது தாயார் திடீரென்று அசுத்த ஆவியினால் அதிகமாக பாதிக்கப்பட்டார்.

மருத்துவம் மற்றும் மந்திரவாதங்களை எவ்வளவோ செய்தும் கூட எந்த பலனுமில்லை. பின்பு ஷாலோம் ஊழியர் நடத்துகிற கூட்டத்திற்கு சென்றால் எனது தாயார் விடுதலை அடைவார்கள் என்று நினைத்து, அங்கு அழைத்துச் சென்றோம். அங்கு ஊழியர் ஜெபித்த போது, தேவன் எனது தாயாருக்கு பரிபூரண விடுதலையைக் கொடுத்தார், இந்த அற்புதத்தின் மூலம் எங்களது முழுக் குடும்பமும் இயேசுவை ஏற்றுக் கொண்டோம். தொடர்ந்து ஆராதனையில் பங்கு பெற்று, ஜெப வாழ்க்கையில் வளர்ந்தோம். பின்பு 2000–ம் வருடத்தில் தேவன் ஊழியத்திற்கென்று என்னை அழைத்தார், அவருடைய அழைப்புக்கு கீழ்ப்படிந்து, ஷாலோம் ஊழியத்தில் இணைந்து, வேதாகம பயிற்சி பெற்று, எனது கிராமத்தில் ஊழியம் செய்து வருகிறேன். தற்போது 32 குடும்பங்கள் ஆண்டவரை ஏற்றுக் கொண்டு ஆராதித்து வருகிறார்கள்.

இந்த சுதேச ஊழியரை ஜெபித்துத் தாங்குவோர் : **Dr. T. ஜெயக்குமார் மோகன்,** K.K. Dist.

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் இதுவரையில் 500 க்கும் அதிகமான பீல் ஆதிவாசி சுதேச ஊழியர்களை எழுப்பி, பயிற்றுவித்து 600 க்கும் அதிகமான ஸ்தல சபைகளை உருவாக்கியுள்ளோம். இவ்வருடத்தில் 200 புதிய சுதேச ஊழியர்களை எழுப்ப தேவன் கிருபை தருகிறார். குடும்பமாக, சபையாக, குழுவாக மாதம் ரூ. 2000/– ஜெபித்துக் கொடுத்துத் தாங்க முன் வாருங்கள். பாரதமெங்கும் வீட்டிற்கு ஒரு நற்செய்திப் பணியாளரைத் தாங்குவோம், தேசம் தேவனை அறியட்டும்! அல்லேலூயா!

Registered with the Registrar of News Paper in India
Under No. TNTAM/2004/16449. Postal Regn. No. : TTN/07/2015-2017.
TN/WPP-95/SR/2015-2017, Date of Publication : 25th of every month.
Posted at Chidambaranagar P.O. 628008 on 25th & 28th of every month

*May every day of the*
*NEW YEAR glow with good cheer &*
*Happiness for you & Your Family*

# Happy New Year!

## 2015



## புத்தாண்டு வாழ்த்துக்கள் - 2015

**Rt. Rev. Dr. V. Devadass & Family**

Shalom Pastors & Bhil Evangelists

Field & Head Office Staff of Shalom

Owned and Published by V. Devadass from New No. 5A/323, Old.No. 5/168,
Caldwell Colony, 3rd Street, Tuticorin - 628 008. and Printed by S.Joseph at Rajan Press,
59, Palayamkottai Road, Tuticorin - 628 002. Editor : V. Devadass